மூர்த்தியின் பொறுப்புவேறு! பூசாரியின்பணிவேறு!

Phone No. 4502
விலை அணு ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (2—11—49) | வெளியூர் (3—11—49) | இதழ் 80

மூர்த்தி பொது சொத்து - பூசாரி ஒரு கட்சியின் கருவி!

மந்திரிகள் கட்சிப் பிரசாரம் செய்வது கண்ணியமற்றது — கண்டிக்கத்தக்கது

வரி கொடுக்கிறோம் - வாதாடும் உரிமை உண்டு நமக்கு

"காங்கிரஸ் பிரசாரத்திற்காக மந்திரி செல்வதா என கேட்கப்படுகிறது. பின்னே, எதற்கு செல்வது? ஒரு சமூகத்தின் மேல் இன்னொரு சமூகத்திற்கு துவேஷம் ஏற்பட பிரசாரம் செய்து வகுப்புக் கலவரத்தை மூட்டச் செல்வதா? அல்லது ஒரு சில சோம்பேறிகளைக் கூட்டி, தன் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு உருப்படியான காரியங்களைத் தடைசெய்து நாட்டை சீர்குலையச் செய்வதா? குறை கூறுகின்றவர்கள் யார் என்றால், அன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஆதரித்து காங்கிரசை எதிர்த்தவர்கள் தான், இன்றும் காங்கிரசை எதிர்க்கிறார்கள் இவர்கள் குறை கூறத்தான் செய்வார்கள்"

—மந்திரி பக்தவத்சலம்—

"பக்கத்தில் ஒரு சாரார் எப்பொழுதும் குறையைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதில்லை. வெள்ளையர் ஆட்சியை விரும்பி சுதந்திர ஆட்சியை வெறுத்த பல பெயர் மாற்றிக்கொண்ட கட்சிகளும் நபர்களுமே குறை கூறுகிறார்கள்"

—காமராஜர்—

சில நாளைக்கு முன், நாம் எழுதியிருந்தோம், 'இப்படியா அமைச்சர்கள், கட்சிப் பணி புரிவதிலே காலத்தைக் கழிப்பது—வரிப் பணத்தை விரயமாக்குவது' என்று. கோபம் வந்துவிட்டது கனம் பக்தவத்சலனாருக்கு! 'கட்சிப் பிரசாரப் பணியைத் தவிர மந்திரிகளை வேறு என்ன செய்யச் சொல்லுகிறார்களாம் இவர்கள்' என்று குடந்தையில் மந்திரி கேலி பேசியுள்ளார்!

ஐயோ பாவம்! காங்கிரஸ் பதவியிலிருந்து சாதித்தது—மக்களுக்கு வாழ்வு தரும் துறையில் தொண்டாற்றியது—ரொம்ப ரொம்பக் குறைவு என்ற நமது மதிப்பீடு எங்கு மறுத்துவிடப்படுகிறதோ என்று அஞ்சி இருந்தோம். அப்படி ஒன்றும் மந்திரியார் செய்துவிடவில்லை, நமது மதிப்பீடு நூற்றுக்கு நூறு உண்மையாக இருந்துவரும் காரணத்தால்.

சாதனை அதிகமில்லாமல் இருக்கிறபொழுது, கட்சிப் பிரசாரப்பணிதவிர வேறுஒன்றும் செய்ய முடியாமல், மந்திரிமார்கள் திண்டாடவேண்டி இருக்கிறது என்பதை, சொந்த அனுபவ வாயிலாகக் காண்கிறார்—சோகிக்கிறார்! "அவ்வளவு பெரிய காரியங்களை நாங்கள் ஒன்றும் சாதித்துவிடவில்லை; அவைகளை மக்களுக்கு அறிவிக்க வேண்டிய அவசியமும் கிடையாது" என்று மறைமுகமாக மந்திரி பக்தவத்சலனார், குடந்தையில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் ஏற்றுக் கொள்ளுகிறார். அத்துடன் அவர் நின்றிருந்தால், நாம் இவருக்குள்ள சங்கடத்தைத் தெரிந்து, இரக்கம் காட்டுவோம்— அடித்துக் கேட்கும் பணியையும் நிறுத்திக்கொள்வோம்.

பேச்சோடு பேச்சாக மெல்ல, நம்மைக் கொஞ்சம் நையாண்டியும் செய்து பார்க்கிறார். நாம ஒரு சமூகத்தின் மீது மற்றொரு சமூகத்தை ஏவிவிடும் வகுப்புவாதப் பணி புரிந்து வருகிறோமாம்! இந்தப் பணியை நாங்களும் செய்ய வேண்டுமென்று இவர்கள் ஆசைப் படுகிறார்களா? என்ற கேள்வியைக் கேட்பதின் மூலம், நமது தன்மானப் பணிக்குக் களங்கம் கற்பிக்கிறார். நாம் புரிவது துவேஷம் பிரசாரம் அல்ல. ஒரு சமுகத்தின் மீது மற்றொரு சமூகத்தை மோதவிடும் கலகப் பணியுமல்ல. மந்திரி பக்தவத்சலனார் உள்பட நமது சமூகத்திற்கு ஆயிரம் ஆயிரமாண்டாக இருந்து வரும் இழிவு ஒழிக்கும் அரும் பணியே நாம் ஆற்றிவருவது. இந்தப் பணியை, விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் எதுவும் நேர்ந்துவிடாவண்ணம் மிக மிக் எச்சரிக்கையாகச் செய்து வருகிறோம். இந்த நமது பணியால், நேரடியாக பக்தவத்சலனாருக்கு நலம் பல ஏற்படவில்லையானாலும், மறைமுகமாக பயன் விளைந்திருக்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது. இந்த நமது வாதத்தில் உள்ள உண்மையை, அமைச்சர் அறிந்து கொள்ளவேண்டுமானால், சுய சிந்தனைக்குக் கொஞ்சம் வேலை கொடுக்க வேண்டும், அப்பொழுது, நமது பணியின் அற்புதமான விளைவை அமைச்சரே அறிந்துகொண்டு அகமகிழ்வார். ஆனால், அது சமயத்திலும், அவரால் நம்மை ஆதரிக்கமுடியாது. அவர் அணிந்திருக்கும் கவசம், அவரையும் நம்மையும் ஒன்று படவிடாமல் தடுத்து நிறுத்திக்கொண்டு இருக்கிறது.

கம்யூனிஸ்டுகள் பக்கமும் கொஞ்சம், பார்வையைத் திருப்புகிறார். அவர்களைச் சுய நலமிகள், நாட்டைச்சீர்குலைப்பவர்கள் என்றும் ஆசீர்வதிக

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

முன்னாள் முதலமைச்சரின் மனக் குழப்பம்

அறியாதவைகளை அறிய முதலமைச்சர் பதவி இடந்தராவிடினும் இன்றேனும் அறிந்திருக்கலாமே!

சென்னை மாகாண முன்னாள் முதல் அமைச்சர் ஓமந்தூர் இராமசாமி (ரெட்டியார்) இங்கிலாந்திலிருந்தோ அமெரிக்காவிலிருந்தோ இங்கு இறக்குமதி செய்யப்பட்ட சரக்கன்று, இந்நாட்டு நிலை தெரிந்துகொள்ளாமலிருக்க. அவர் நம்நாட்டில் நம்மவரிடையே பிறந்து வளர்ந்து முதலமைச்சராகியிருந்து வெளியேற்றப்பட்டவராதலின் அவருக்கு அனைத்தும் தெரிந்திருத்தல் வேண்டும். ஆனால் தெரியவில்லை.

திருவண்ணாமலையில் அவர் பேசிய பேச்சில், "சாதி—மத— பாஷை விஷயத்தில் அனாவசியத் துவேஷம் ஏன் ஏற்படுகின்றது?" என்று ஒரு கேள்வியைப் போட்டிருக்கின்றார். உண்மையிலேயே முன்னாள் முதலமைச்சருக்கு இது புரியவில்லையா? புரிந்தும் புரியாததுபோலப் பாசாங்கு செய்கிறாரா? நாட்டிலே துவேஷம் என்று ஏற்படும்? ஒருவன் தான் உயர்ந்தவன் என்பான்; மற்றவன் இல்லை என்பான்; ஒருவன் மற்றவனைத் தாழ்த்திவைப்பான்; தாழ்த்தப்பட்டவன் எதிர்ப்பான். இதுதானே துவேஷத்துக்கு வித்து. இதை ஒழிக்க எதிர்க்கும் தாழ்த்தப்பட்டவனை அடக்க முயன்றால் முடியுமா? ஒன்றிருவரை அடக்கிவிடலாம் கையிலுள்ள அதிகாரத்தைக்கொண்டு. அதிகாரம் போய்விட்டால்......! எனவே அனாவசியமாகத் துவேஷம் நாட்டில் வளராமலிருக்கவேண்டுமானால், தம்மை உயர்ந்தோர் என்று கூறிக்கொள்ளும் மனப்பான்மையோ, தத்துவமோ, கொள்கையோ, கூட்டமோ இந்நாட்டில் இல்லாதபடி முதலில் செய்யவேண்டும். பிறரை இழிவுபடுத்தி, கீழாக்கி, தாழ்த்தி வைக்கும் மனப்பான்மையும் தத்துவங்களும், கொள்கைகளும், மக்களும் நாட்டிலிருக்க, அவை குறித்துக் கவலைப்படாமல், இக்கொடுமைக்குப் பலியாகிவிட்ட மக்கள் இப்போது கிளர்ந்தெழுவதைத் துவேஷம் எனும் பெயரைக் கொண்டு அடக்கிவிட முயல்வது ஆகும் காரியமா? துவேஷம் ஒழிய, முதலில் இவை ஒழிக்கப்பட்டால், தாழ்த்தப்பட்டவர்கள் கிளர்ச்சிக்கே வழியின்றிப் போய்விடுமே! இந்த பாலபாடம் புரியவில்லை முதலமைச்சராயிருந்தவருக்கு!

இவர் புரிந்தும் புரியாததுமாகக் கூறியிருக்கும் மற்றொரு சங்கதி இதைவிட விந்தையாயிருக்கிறது. "நம் அரசாங்கம் சனநாயக அரசாங்கம். மக்களுட் பெரும்பாலோர் உணர்ந்த மொழியிலேயே அரசாங்கத்தை நடத்தவேண்டியதுதான் சனநாயக அரசாங்கத்தாரின் கடமையாகும். இவை தவிர, அரசியல், வாணிகம், சாஸ்திரம், வகுப்புக் கருத்து முதலியவை பாமர மக்கள் புரிந்துகொள்ளும் மொழியில் விளங்கவேண்டும்" என்று முன்னாளர் கூறியுள்ளார். இந்தப் பகுதி வரை நாடு எப்படி இருக்கவேண்டுமென்பதை அவர் புரிந்துகொண்டிருக்கிறார் என்பது தெரிகிறது. இவருடைய கூற்றின்படி தமிழ் நாட்டில், நடைபெறும் சனநாயக அரசாங்கத்தின், அரசாங்க மொழி மக்களுட் பெரும்பான்மையோர் உணர்ந்த தமிழில் அல்லவா இருக்க வேண்டும்! நூல்கள் எல்லாம் பாமர மக்கள் புரிந்துகொள்ளும் தமிழ் மொழியில் அல்லவா இருத்தல்வேண்டும்?

ஆனால் இதுதான் புரியவில்லை தோழர் ஓமந்தூர் இராமசாமி (ரெட்டியாருக்கு). "இந்தியில் இந்தியைத் தவிர வேறு எந்த மொழியும் நாட்டு மொழியாக விளங்க முடியாது" என்று அறுதியிட்டுக் கூறித் தாம் புரிந்துகொள்ளாத பகுதியை விளக்கியிருக்கிறார் அவர்,

சமார் 200 ஆண்டுக் காலம் வெள்ளையர்கள் செய்த மகோன்னத முயற்சியின் பலனாக, 100-க்கு 5-பேர் ஆங்கிலத்தை நன்கு எழுத, படிக்க, அறிய முடிந்தது என்றால், இந்தியை நம்மவர்கள் படித்துத் திறன் அடைய எவ்வளவு காலமாகும். இந்தி நம் தமிழ் நாட்டுப் பொதுமக்கள் மொழிதானா? தமிழ்ப் பாமரமக்கள் புரிந்து கொள்ளும் மொழிதானா? ஓமந்தூரார் ஆம் என்று நெஞ்சத் துணிவுடன் கூற முடியுமா?

"சென்னை மாகாணத்தில் 35-ஆண்டுகாலமாக இந்திப் பிரசாரம் நடக்கிறது. 4500 பேர் இந்திப் பிரசாரம் புரிகின்றனர். 5 கோடி மக்களைக் கொண்ட இந்த மாநிலத்தில் இவ்வளவு காலத்திறகு 15 லட்சம பேரே இந்தியில் தேறியுள்ளனர். அதிலும இவ்வளவு பேர் தேறியிருக்கலாம. இவர்களில்பேசக் கற்றவர்கள் மிகச் சிலரே. எனவே, நன்கு பேச வட இந்தியாவில் சிறிதுகாலம தங்கி வசிப்பதால் பழகிக் கொள்ளலாம. இந்தி பேசுகிறவர்களுடன் நெருங்கிப் பழகினால்தான் பலன் கிடைக்கும"

என்று ஓமந்தூராரே அதே கூட்டத்திலேயே கூறியுள்ளார். இவருடைய கூற்றிலிருந்தே 35 ஆண்டு இடைவிடா உழைப்பின் பலன் விளங்குகிறது. இந்தப் பலனும அரசாங்கத்தின் அதிகார பூர்வமான, கட்டாய—நிர்ப்பந்த முறைகளின் உதவியால் கிடைத்ததே. இப்படிக் கிடைத்த பலனும், பேசப் பழக்கமின்றி வட இந்தியாசென்று, இந்தி பேசுகிறவர்களுடன் நெருங்கிப் பழகவேண்டிய நிலையில்தானிருக்கிறது.

வடநாட்டிலோ, அல்லது இந்தி பேசுகிறவர்களிடையிலோ, தமிழ்

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

ஆலயப்பிரவேச லட்சணம்!

ஆலயப்பிரவேசம் எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்பதை விளக்கவேண்டுமானால் அதற்கு எத்தனையோ மேற்கோள்களை எடுத்துக்காட்டலாம். ஆடம்பரமாகச் சிலவிடங்களில் ஆலயப் பிரவேச நாடகம் நடந்ததேயன்றி உண்மையான பயன் எதும விளைந்ததாகத் தெரியவில்லை. இன்னும் பலவிடங்களில் ஆலயங்கள் என்பவை பார்ப்பனரின பரசுறையாகவே இருந்துவருகின்றன. பார்ப்பன மதகுருவாகிய சங்கராச்சாரியார் பிறந்த இடமாகிய காலடியிலும், திருவாங்கூரிலுள்ள சில ஆலயங்கள் இன்னமும் ஆதித் திராவிட மக்களுக்கு திறந்துவிடப்படவில்லை. இம்மாதிரி இன்னமும ஆலயம் திறந்துவிடப்படாதிருக்கும் அதிசயம் இந்திய உணவு மந்திரிதோழர்தௌலத்ராம்தென்னிந்திய வருகையின் காரணமாக வெளிப்பட்டு விட்டது. அண்மையில் அமைச்சர் தௌலத்ராம் திருச்சூருக்குவந்திருந்தார். அப்பொழுது தான் சங்கராச்சாரியார் அவதரித்த ஸ்தலமாகிய காலடியில் ஆலயப் பிரவேசம் நடைபெறவில்லை என்பதை அறிந்து கொண்டாராம். உடனே "அப்படிப்பட்ட ஆலயத்தின் நான் அடியெடுத்தும் வைக்கமாட்டேன்" என்று சொல்லி விட்டாராம். ஆலயப் பிரவேசத்தின் லட்சணத்தை விளக்க இதைவிட வேறுசான்று என்ன தேவை?

மாலை மணி

சென்னை 2—11—49 புதன்கிழமை

மாசடைந்த மாணவர் உலகு!

(3)

அர்த்தமற்றக் கோரிக்கைகளை கிளப்பி, முறையில்லா முறையை மேற்கொண்டு, ஸ்தாபகர் தினமாகப் பார்த்து காலித்தனத்தைத் தொடங்கினர். இரு கோரிக்கைகளும் பொருத்தமற்றன என்பதையும், கிளர்ச்சிக்கார மாணவர்களுக்கு எந்த வகையிலாவது இன்றுள்ள துணைவேந்தரை விரட்டிவிடவேண்டுமென்பதும்தான் உறுதியான காரணமென்பதையும், மற்ற நாட்களில் கிளர்ச்சியைத் தொடங்காமல் 'ஸ்தாபகர் தின'மாகப் பார்த்துக் கிளர்ச்சியைத் தொடங்கினதற்கு அந்த விழாவைக் கொண்டாடவிடாமல் தடுக்கவேண்டும் என்பதுதான் அவர்களின் அந்தரங்க எண்ணம் என்பதையும், சென்ற இரு கட்டுரைகளிலும் விளக்கமாக எடுத்துக்காட்டி இருந்தோம். எனவே, மாணவர்களில் ஒரு பிரிவினர் கிளர்ச்சியில் ஈடுபட்டது, எந்தவித நேர்மையான பிரதி பிரயோஜனத்தையும் கருதியல்ல என்பதை அனைவரும் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். துணைவேந்தரை அகற்றவேண்டுமென்பதும், ஸ்தாபகர் தினத்தைக் கொண்டாடவிடாமல் செய்துவிட வேண்டும் என்பதுந்தான், கிளர்ச்சியில் ஈடுபட்ட ஒரு சிறு கும்பலின் உள்ளக்கிடக்கை என்பதையும் நாம் கருத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

ஸ்தாபகர் தின விழாவைக் கொண்டாடக் கூடாது என்ற கிளர்ச்சி இன்றுமட்டுமே புதிதாக முளைந்துவிட்டதாக எவரும் கொள்ளக்கூடாது, சென்ற ஆண்டும், இதே தினத்தில், சிறுபுகை மாணவர்களில் ஒரு சாராரிடம் கிளம்பியதுண்டு. இந்த ஆண்டு கலகம் புரிந்தவர்களில் முக்கியமான சிலரும், சென்ற ஆண்டு எடுத்துக் கொண்ட குழப்ப முயற்சியில் ஈடுபட்டிருந்தவர்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது, பல்கலைக்கழகம் கண்ட காலஞ்சென்ற ராஜா. சர். அண்ணாமலையார் மீது. அவருடைய வர்த்தகத் துறையைப் பொருத்தமட்டில் எந்த விதமானக் குற்றத்தைச் சுமத்துவதாக இருந்தாலும், பல்கலைக் கழகம் கண்டதற்காக. அவரை போற்றிப் புகழ்த்தான் வேண்டும் பல்கலைக்கழகம் கண்டதுகூட குற்றமெனக்கொண்டு. அவருடைய தினவிழா கொண்டாட்டத்தைச் சீர்குலைக்க முனைவதும், எதாவது சாக்குக்காட்டி அந்ததினத்தில் கலாம் விளைவிப்பதும், கண்ணியமான மாணவர்கள் செய்கின்ற காரியமாகாது. பல்கலைக் கழக ஸ்தாபகர் தின விழாவைக் கொண்டாடக்கூடாது என்று குறைபடும் மாணவர்கள் அந்தப் பல்கலைக் கழகம் இருக்கும் இடத்திற்கே காலெடுத்து வைத்திருக்கக் கூடாது. உயர்ந்த ஒழுக்கச்சீலர்களாக இந்த மாணவர்கள் உண்மையிலேயே இருந்திருப்பார்களானால் பல்கலைக் கழகத்தில் சேர்ந்திருக்கவே கூடாது. பல்கலைக்கழகத்தில் சேர்ந்துவிட்டது முதல் குற்றம். சேர்ந்தபிறகு தான் உண்மை தெரிந்தது என்று வாதிக்கப்படுமானால், உடனே மரியாதையாகப் பல்கலைக் கழகத்தைவிட்டு வெளியேறி இருக்க வேண்டியது தான் நாணயமுள்ளமாணவர்கள் செய்யக் கூடிய செயல், படிக்க-பட்டம் பெற—பதவி தேட—புகழ் அடைய-அனைத்திற்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அவசியமாகிறது, ஆனால், அதன் ஸ்தாபகர் தின விழா நடத்தப்படுவது மட்டும் இவர்களுக்குக் கசப்பாகத் தெரிகிறது. அருமையான ஒழுக்க முறை!

ஸ்தாபகர் தின விழாவில் கலந்துகொள்ள விருப்பமில்லாத மாணவர்கள், விழாவில் கலந்துகொள்ளாமலே இருந்துவிட்டிருக்கலாம். இதனால் தாங்கள் கொண்டிருக்கும் அறநெறி வெற்றியடைந்ததாகக் கூட மனச்சாந்தி அடையலாம். இவர்களுக்கு அந்த விழா பிடிக்காமல் இருக்கலாம். அதில் கலந்து கொள்ளாமல் இருப்பதற்கான உரிமை இவர்களுக்கு இருக்கிறது. இதுபோலவே, விழாவில் கலந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கும் அதற்கான உரிமை அவர்களுக்கும் இருக்கிறது. ஆனால், இதைக் கருதாமல். அவர்கள் உரிமையைக் குலைப்பதற்கு இவர்கள் யார்! இவர்களுக்கு அந்த உரிமை எது?

சென்ற ஆண்டு ஸ்தாபகர்தின விழாவை வெற்றியாக கொண்டாடினதற்கு. நமது திராவிட மாணவர்கள் வெகு ஆர்வத்தோடு ஒத்துழைத்திருக்கிறார்கள். குறிப்பாக விழாவின் வெற்றிக்கு, நமது மாணவர்கள்தான் மூல காரணம் என்று கூறுவதுகூட மிகைப்படக் கூறியதாகாது, இதனால், விழாவைக் கொண்டாடாமல் தடைசெய்து விடவேண்டுமென்னும்சிலவிஷமிகளின் கருத்து கருவிலேயே செத்துவிட்டது. கலகப்புகை, இன்று எழுந்தது போல் பெருந்தீயாக எழாமல் வெறும் புகைச்சலோடு கருகிப் போய்விட்டது. இதன்பலனாக, கலகக்கார மாணவர்களுக்கு, நமது திராவிட மாணவர்கள் மீது உள்ளூரப்பகைத் தீ மூண்டுவிட்டது; தினம் தினம் வளர்ந்து கொண்டும் வந்தது. திராவிட மாணவர்கள் தலைவரின் பிறந்த நாள் கொண்டாடுகின்றபொழுது, அந்தக் கொடுந்தீ எரிமலையாக வெடித்துவிட்டது. நமதுமாணவர்களில் பலர் பலமாகத் தாக்கப்பட்டனர், அதுவும் போலீசாரின் பாதுகாப்பில் பல்கலைக் கழகத்துக்குள்ளேயே, அந்த அடிதடி ஒத்திகை நடத்திக்காட்டப்பட்டது. இது சம்பந்தமாக திராவிட மாணவர்கள் ஐவர்மீதும், காங்கிரஸ் மாணவர்கள் பன்னிருவர் மீதும், போலீஸ் வழக்குத் தொடுத்தது. காங்கிரஸ் மாணவர்கள் மீது போலீசார் தொடர்ந்த வழக்கை மேலிடத்தின் உத்தரவுப்படி, வாபஸ் பெற்றுக்கொண்டனர். நமது திராவிட மாணவர். சம்பந்தப்பட்ட மந்திரிக்கு மனுச் செய்து கொண்டும் பயன்விளையவில்லை. வழக்கு நடந்தது; அப்பீலில், நமது திராவிட மாணவர்கள், குற்றமற்றவர்களாக வெளிவந்தனர்.

காங்கிரஸ் மாணவர்கள் மீது போலீஸ் தொடுத்த வழக்கை வாபஸ் செய்யவேண்டுமென்று கட்டளைப் பிறப்பித்த அதே காங்கிரல் மந்திரி சபையில் தான் இன்று மாணவர்களின் காலித்தனத்தைக் கண்டிக்கும் கல்வி அமைச்சர் கனம் மாதவமேனன் பதவியிலிடுக்கிறார். சென்ற ஆண்டில், கலகம் செய்த காங்கிரஸ் மாணவர்கள் மேல் போலீஸ் எடுத்துக்கொண்ட நடவடிக்கையில், மந்திரிகள் தலையிடாமல் தீர்ப்பளிக்கும் பொறுப்பை நீதி சபையினிடமே ஒப்படைத்திருந்தால், இன்று ஸ்தாபகர் தின விழாவில் அளவு கடந்து அக்கிரமத்தில் இறங்கும் துணிவைச் சில மாணவர்கள் கொண்டிருக்கமாட்டார்கள். அன்றையதினம் காங்கிரஸ் கனங்கள் நடந்துகொண்ட போக்குத்தான். இன்றைய கிளர்ச்சிக்கான துணிவைத் கொடுத்தது சில மாணவர்களுக்கு என்பது மறுக்க முடியாததாகும்,

போலீஸ் வழக்கைத்தான் வாபஸ் வாங்கினார்களே, பல்கலைக்கழக விதிகளின்படியாவது, கலகத்திற்குக் காரணஸ்தரான காங்கிரஸ் மாணவர்கள் மீதாவது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டார்களா என்றால். அந்தக் கேடும் இல்லை. இதிலும் நமது திராவிட மாணவரைத் தான் பலியிட்டார்கள். அன்றையதினம் பல்கலைக்கழக நிர்வாகியும், கனங்களும் காட்டிய மனோபாவந்தான், எதைச் செய்தாலும் மேலிடத்தின் ஆதரவால் தப்பித்துக்கொள்ள முடியும் என்ற மன உறுதியோடு, கலக உணர்ச்சியுடைய மாணவர்கள் மேலும் மேலும் பல்கலைக்கழகத்தில் படமெடுத்து ஆட ஆரம்பித்தார்கள்.

பொருந்தாதக் கோரிக்கைகளை வெளியிட்டார்கள்—காலித்தனத்தில் இறங்கினார்கள்—துணைவேந்தரை பன்னிரண்டு மணி நேரம் சிறை வைத்தார்கள்—கல்லால் அடித்தார்கள்—வசைமொழியால் ஏசினார்கள்-கொடும்பாவி கட்டி இழுத்தார்கள்— அதனைக் கொளுத்தி மகிழ்ந்தார்கள். ஸ்தாபகர் தின விழா கொண்டாட்டத்தைக் குட்டிச்சுவராக்கினார்கள்—பல்கலைக் கழகத்தின் நற்பெயருக்கு நாசமுண்டாக்கினார்கள், மாணவர்களில் ஒரு பிரிவினர்.

இவ்வளவு அக்கிரமச் செயல்களையும் சகித்துக் கொண்டு கலகக்கார மாணவர்களுக்கு, துணைவேந்தர் கொடுத்துள்ள தண்டனை குறைவானதாகத்தான் இருக்கிறது.

12 மாணவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து தள்ளப்பட்டார்கள்.

10 மாணவர்கள் கொஞ்சகாலத் திற்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளார்கள்.

6 மாணவர்களுக்கு மாற்றுச் சீட்டு அளிக்கப்பட்டு இருக்கிறது.

தற்காலிகமாக தொழிற் கல்வி கல்லூரி மூடப்பட்டிருக்கிறது

மாணவர் உலகுக்கு உண்டாக்கிய மாசையும், துணை வேந்தருக்கு இழைத்த கொடுமையையும் கற்பனை செய்து பார்க்கிறவர்களுக்கு, கலகக்கார கும்பலுக்கு அளிக்கப்பட்டுள்ள தண்டனை போதுமானது என்னும் திருப்தி ஏற்படாது. இதுவே, கலகம் செய்தவர்கள் மாணவர்களாக இல்லாமல், இடமும் பல்கலைக் கழகமாக இல்லாமல், கண்ணியம் நிறைந்த ஒருவரை பன்னிரண்டு மணி நேரம் ஒரு அறையில் தள்ளி அடைத்து வைத்திருந்தால் என்ன தண்டனைத் தரப்படும் தீங்கிழைத்தவர்களுக்கு, என்பதை யோசித்துப்பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் துணைவேந்தர் எந்த அளவு பகை உணர்ச்சிக்குப் பலியாகாமல் பெருந்தன்மையாக நடந்துகொண்டிருக்கிறார் என்பதை நன்கு புரிந்துகொள்ள முடியும்.

கனம் கல்வி அமைச்சரிடம் காவடி தூக்கிற்று கலகக்கார கும்பல். முகத்தில் அறைந்ததுபோல் 'துணைவேந்தரிடம் போய் மன்னிப்புக் கேளுங்கள்' என்று சுடச்சுடக் கொடுத்தனுப்பினார் மாணவர்களுக்கு. முன்பிருந்த அமைச்சர் செய்துவிட்ட தவறைப் போலவே. கனம் மாதவர் தவறிழைக்கவில்லை. நீதியாக நடந்துகொண்டிருக்கிறார் அமைச்சர். இந்த ஒரு விஷயத்திலாவது, நேர்மை அவரிடம் குடிபுகுந்திருந்ததற்காக. நாம் அவரை மனமாரப் பாராட்டுகிறோம். இந்த உறுதி இது விஷயத்தில், அமைச்சருக்கு என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமென்றும் விரும்புகிறோம்.

கலகக்கார மாணவர்களின் சாகசத்திற்கு, நமது திராவிட முன்னேற்றக் கழகமாணவ மணிகள் பலியாகாமல் பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொண்டதற்காக நமது பாராட்டுதலை அவர்களுக்கு உரிமையாக்குகிறோம். மேலும், கலகக்காரரால் சிறை வைக்கப்பட்டிருந்த துணைவேந்தரை. அவரது மாளிகைக்குத் தக்கப் பாதுகாப்போடு இட்டுவந்து சேர்த்ததற்காகவும், அதில் பங்கு எடுத்துக்கொண்ட திராவிட முன் முன்னேற்றக் கழக மாணவர்களுக்கும் மற்ற கடமையுணர்ச்சியுடைய மாணவர்களுக்கும் நமது பாராட்டுதலை உரிமையாக்குகிறோம்.

பயனுள்ளமருந்து!

சென்னை சுகாதார அமைச்சர் டாக்டர். ராஜன் சமீபத்தில் எல்லூரில் ஒரு ஆஸபத்திரி கட்டிடத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டிப் பேசிய போது

"சென்னை மாகாணத்திலுள்ள மடங்களுக்கும் கோவில்களுக்கும் எழுதி வைக்கப்பட்டுள்ள 23000 பெரிய கட்டிடங்களை ஆஸபத்திரிகள் போன்ற பொது ஸ்தாபனங்களை நடத்துவதற்கு உபயோகிக்கலாம்" என்று கூறியிருக்கிறார். அமைச்சர் ஒரு டாக்டர். ஆகையால்இந்த மத ஸ்தாபனங்களை ஆஸ்பத்திரிகளாகச் செய்ய வேண்டும் என்றுசொல்லுவது பொருத்தமுடையதே. இங்ஙனம் டாக்டரின் அறிவு பயனுள்ள பணியாற்றப் பயன்படும் அளவுக்கு பகுத்தறிவு இயக்கம பயனுள்ள மருந்து கொடுத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரையில் 'ஆகஸ்டு'த் தனம்!

மதுரை, அக். 29—

நேற்று இரவு இங்கு இவ்வூர் காங்கிரஸ் கமிட்டியார், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்காக விக்டோரியா எட்வர்ட் ஹாலில், பந்தலும், தோரணங்களும், கட்டிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில் மங்கம்மாள் சத்திரத்திற்கு முன் உள்ள மரத்தில் கட்டியிருந்த தி. மு. கழகக் கொடியையும், பஸ் ஸ்டாண்டு முனையில் இருந்த தி. மு. கழகக் கொடியையும் கீழே இறக்கிவிட்டதோடல்லாமல், சத்திரத்திற்கு முன்பு இருந்த கொடிக்குப் பதிலாகத் தங்கள் கொடியாகிய காங்கிரஸ் கொடியையும் ஏற்றியும், மற்றொரு கொடியை எங்கேயோ எடுத்துக்கொண்டு போயும் ஆகஸ்டுத் தனம் செய்துள்ளார்கள். இது குறித்து மதுரை திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் காமராஜருக்கும், சென்னைப் பிரதமருக்கும் தந்தியின் மூலம் செய்தி தெரிவித்துள்ளார். தந்தியில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரிலுள்ள மரத்திலிருந்து ஒன்றும், பஸ் ஸடாண்டு முனையில் இருந்தது ஒனறும ஆகியஇரண்டு திராவிட முனனேற்றக கழகக் கொடிகளை அகற்றிவிட்டு அவ்விடஙகளில காங்கிரஸ் கொடிகளைப் பறகக விட்டிருக்கிறாகள் காங்கிரஸ் ஊழியாகள். நலல எண்ணததிறகுரிய மந்திரிகளாகிய தாங்களும். மதுரைககு வருகைதரும காஙகிரஸ தலைவர்களும இமமாதிரி செயலகளை ஒபபுகெகாளளுகிறீரகளா? நீதி வேண்டுகிறோம்.

செயலாளர்,

"திராவிட முன்னேற்றக் கழகம்"

திராவிட முனனேற்றக் கழக நகரக் கிளையின் செயற் குழுவின் கூட்டி மேற்கொண்டு இதைப்பற்றி பரிசிலனை செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

(வி—உ)

ஹிந்திக்கு மான்யம்!

சென்னை சர்வகலாசாலையில் 1950-51ம் வருஷத்தில் ஹிந்தி வகுப்புக்கள் புதுத்த மொத்தமாக ஒரு மானியம் கொடுக்கும் திட்டத்தை சர்க்கார் ஆலோசிக்குமென்று சென்னை சர்க்கார், கலாசாலை அதிகாரிகளுக்குத்தெரிவித்திருக்கிறது.

ஹிந்தி இலாகாவை ஆரம்பிக்க மானியங்கோரி கலாசாலை கேட்டதின் பேரிலேயே இந்த பதில் கூறப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

மூர்த்தியின் பொறுப்பு வேறு!

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறார்! அவர் ஆசையும் தீர்ந்து போகட்டும்.

காங்கிரஸ் கட்சியையும், மந்திரி சபையினர் நடத்தையையும் குறை கூறுகிறவர்கள் யார் யார் என்று ஒரு விளக்கமும் தருகிறார். காங்கிரஸ் ஆட்சியில் குறை காண்பவர்கள் எல்லாம் அன்று ஒருநாள் பிரிட்டிஷாரை ஆதரித்தவர்கள் தான் என்றும், அன்றும் காங்கிரசை எதிர்த்து வந்தார்கள் என்றும், இன்றும் காங்கிரசை எதிர்த்து வருகிறார்கள் என்றும், மந்திரியார், எதிர்ப்பாளர்களுக்குப் பட்டமளிப்பு விழா நடத்துகிறார். அவர் கூறுவதை அப்படியே, விவாதத்திற்காக முழுதும் உண்மையென்றே எடுத்துக்கொண்டு பார்ப்போம். முன்பு பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவுகாட்டி காங்கிரசை எதிர்த்து வந்தவர்கள், இன்று காங்கிரசின் கோணல் போக்கைக் கண்டிப்பது சட்ட விரோதமான செயல் என்று ஏதாவது மத்திய சர்க்காரிலே தடை விதிகள் போடப்பட்டிருக்கிறதா என்ன? அப்படி ஒன்றும் இருப்பதாகக் காணோமே! இனியாவது அன்றும் இன்றும் காங்கிரசை எதிர்த்தவர்கள் — பிரிட்டிஷாரோடு ஒத்துழைத்தவர்கள் — வாயிருந்தும் ஊமையர்களாகவும், கண்ணிருந்தும் குருடர்களாகவும், காது இருந்தும் செவிடர்களாகவும் தான் இருந்தாக வேண்டுமென்று, இனியும் தயக்கம் காட்டாமல் நாளையே சட்டம் ஒன்று செய்துவிட வேண்டுமென்று, பக்தவத்சலனாரை வேண்டிக் கொள்ளுகிறோம். அதன்பிறகு நாம் வாய் திறந்தால் வேண்டுமானால், பக்தவத்சலனார், நம்மை என்ன செய்யவேண்டுமென்று கருதுகிறாரோ, அந்தப்படி எல்லாம் செய்துவிடட்டும். நாம் அதற்குத் தயாராக இருக்கிறோம். முதல் முதலாக சர்க்கார் அலுவலகங்களில் இருக்கிற உயர்ந்த-சிறிய உத்தியோகஸ்தர்களுக்கு எல்லாம் சீட்டளித்தாக வேண்டும். பெரிய பெரிய சிவிலியன்களுக்கெல்லாம் பிரிவு உபசாரம் செய்தாக வேண்டும், காமராஜரிடம் விண்ணப்பித்துக் கொண்டு, கதர் குல்லாய்ப் படை ஒன்றைத் திரட்டி, காலியாகும் அந்த இடங்களை நிரப்ப முயற்சிக்க வேண்டும். அது சமயம் நாட்டு நிர்வாகம் நடைபெறுது! காந்தி பஜனை முழு வெற்றிகரமாக தினம் தினம் நடந்தேறிய வண்ணம் இருக்கும்! செய்வாரா அமைச்சர், இந்த அரிய கோட்பாட்டின்படி!

முன்னாள் காங்கிரஸ் தலைவர்களால் 'ஏகாதிபத்யாண்கள்' என்று கண்டன மாரிகளுக்குள்ளாக்கப்பட்ட, அதே ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்களைத்தானே, அரசியல் ஆக்க மன்றத்தில், சில நாளைக்கு முன், படேல், போற்றினார் — புகழ்ந்தார் — சிரஞ்சீவி பட்டம் வழங்கினார். முன்னாள் கூறினதற்கு முரண்பாடாக நடந்துகொள்ளும் கும்பலைச் சேர்ந்த பக்தவத்சலனார், நம்மைக் கேலி செய்ய கிளம்புவது, வேதனைமிக்க விசித்திரமாகும்.

முன்னாள் பிரிட்டிஷாரை ஆதரித்துக் காங்கிரசைக் குறைகூறினவர்களிடம், 'வரி வாங்குவதில்லை' என்று, துணிவிருந்தால், நாளையே ஒரு உத்திரவு போட்டுவிட்டும் அமைச்சர், அதன் பிறகு பார்க்கட்டும் நாம் ஏதாவது, இந்த அமைச்சர்களைக்குறித்து வாய் திறக்கின்றோமா என்பதை! இதற்கானத் துணிவிருக்கிறதா? சட்டத்தில் இடமிருக்கிறதா?

எதிர்ப்பாளருக்குக் களங்கம் கற்பித்துவிடுவதாலேயே, காங்கிரஸ்கட்சிப்பிரசாரத்தை அமைச்சர்கள் செய்துவருவது நேர்மையானதுதான் என்று மெய்ப்பித்துவிட்டதாக ஆகிவிடாது! எதிர்ப்புக்கு இழிவான பட்டம் சூட்டிவிட்டதாலேயே, பொது மக்கள் மந்திரிகளுக்குப் பூரண கும்பம் எடுக்க இனியும் போட்டியிடமாட்டார்கள்!

காங்கிரஸ் கட்சி அரசாங்கமானாலும், அதனிடத்திலிருந்து, கட்சி வேற்றுமை இல்லாமல் பொது மக்கள், நன்மைகளை எதிர்பார்க்கத்தான் செய்வார்கள். அமைச்சர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், பாரபட்சமாக நடந்து கொள்ளாமல், எல்லா மக்களின் சுக துக்கங்களையும் துடைக்க முன்வர வேண்டும். அதற்குப் பொதுமை உள்ளம் வேண்டும் அமைச்சர்களுக்கு. அமைச்சர்கள் கட்சிப் பிரசாரம் செய்யக் கிளம்புவதினால், பொதுமை உணர்வு வளருவதற்கு பதில், கட்சி உள்ளம்தான் உரம் பெற்று ஓங்கும். இதன் பலனாக, அமைச்சர்கள், எந்த விஷயத்திலும் நேர்மையாக நடந்துகொள்ள முயன்ற போதிலும், இறுதியில் தோல்வியே அடைந்து, சொந்தக் கட்சினருக்கு சலுகை காட்ட வேண்டிய கட்டாயத்தைப் பெற்றுவிடுகிறார்கள். இதுவுமல்லாமல், மந்திரிகள் கட்சிப் பிரசாரம் செய்வதின் காரணமாக, 'நமது கட்சியினாதானே! நாம் எந்த அக்கிரமத்தைச் செய்தாலும் நமக்கு தண்டனை இருக்காது! தண்டனை கிடைத்தாலும் மந்திரிகளின் சிபார்சு பெற்று தண்டனையை ரத்து செய்து கொள்ளலாம்' என்ற அக்கிரம நம்பிக்கையைக் கொடுத்து விடுகிறது காங்கிரஸ் கட்சியினருக்கு. இதனால், மற்ற மக்களுக்கு, ஆட்சியாளர்கள் மீது அர்த்தமற்ற அவநம்பிக்கையும், ஆளவந்தார்கள் மீது அலட்சியமும் தோன்றுவதற்கு இடமேற்படுகிறது. இந்த மனோதத்துவம் மந்திரிகள் அறியாததல்ல. எனவேதான், கண்டிக்கிறோம், கனங்கள் கட்சிப் பிரசாரம் செய்து வருவதை. காங்கிரஸ் கட்சியினர் மட்டும் வரி செலுத்தவில்லை. மற்றக் கட்சியினரும் வரி தருகிறார்கள். அந்த வரிப் பணத்திலிருந்துதான் மந்திரிகள் மாதச சம்பளமும், பிரயாணப் படியும் பெற்று வருகிறார்கள். இந்த நிலையில மந்திரிகள் கட்சிப் பிரசாரம் செய்வதற்கென்றே சுற்றுப் பிரயாணம் செய்வதை நீதியான தென்றோ நேர்மையான தென்றோ எவரும் கூற மாட்டார்கள். நாம் வெளிப்படையாகக் கண்டிக்கிறோம். மற்றவர்கள் மனத்துள்ளே சபித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவ்வளவுதான்!

கோயிலுள்ள மூர்த்தி போல் இருக்கவேண்டியவர்கள் அமைச்சர்கள். மூர்த்தி பக்தர்களிடம் பேசாது. அந்தப் பணியை கவனித்துக் கொள்ள பூசாரி இருக்கிறார். மூர்த்திகளின் விசேஷத்தைக் குறித்து, பூசாரி எவ்வளவு வேண்டுமானால் புராணம் படிக்கலாம். பொய் பல கூறலாம்! அது அவருடைய பணி. இதற்கு, எவரும் குறைபட மாட்டார்கள். மூர்த்தி போல இருக்க வேண்டும் அமைச்சர்கள்! பூசாரி நிலையில் இருக்கும் காமராஜர் நாடு சுற்றி, ஆளவந்தார்களுக்கு ஆள் பலம் திரட்டட்டும். அதற்கு, அவரைக் காட்டிலும் வேறு சிறந்த ஆள் கிடைப்பது கஷ்டம்! அவர் பணியில் ஏன் அமைச்சர்கள் குறுக்கிட வேண்டும் என்பதுதான் நமது கவலை! கட்சிப் பணியிலே உண்மையான பற்று இருக்குமானால், கனம், பக்தவத்சலனார், உடனடியாகப் பதவியை ராஜிநாமா கொடுத்துவிட்டு, காங்கிரஸ் பிரசாரப் படையிலே, தம் பெயரையும் பதிவு செய்துகொள்ளட்டும், அப்பொழுது, அவரைப் 'பிரசாரப் பணி புரியாதீர்' என்று நாம் கேட்க மாட்டோம். நமது வரிப் பணத்திலே, அவர் கட்சிப் பணி புரிந்து வரும் வரையில், அதை நாம், கண்ணியமற்றது—கண்டிக்கத் தக்கது என்று தான் கொள்ளுவோம். கண்டிப்போம்-கிளர்ச்சி செய்வோம்— ஆனால் கவுரவமான சொற்களால — அமைதியான முறைகளால்!

வட நாட்டார் நம்மைப் பற்றி நினைப்பதென்ன?

"தமிழ் நாட்டவர்கள் புத்திசாலிகள், இவர்கள் எதிலும் முன்னுக்கு வருகின்றார்கள். எல்லா இலாகாக்களிலும் அவர்களா? இவர்களை உள்ளே நுழையவிடக் கூடாது என்றுதான் அ. இ. சபையில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற மூழு முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது வடநாட்டாரால்" என்று ஓமந்தூர் இராமசாமி (ரெட்டியார்) திருவண்ணாமலைப் பேச்சில் கூறியுள்ளார்.

இந்தக் கால நிலையே இதுவானால் இன்னும் நம்மவர்கள் இந்நிலையைப் படித்துக்கொண்டு போனால் மட்டும் நம்மைப் பூரண கும்பமேந்தி வரவேற்று உள்ளே நுழைய விடுவார்கள் வடநாட்டார் என்று இந்த முன்னாள் அமைச்சர் எப்படி நம்புகிறார்? என்ன ஆதார பூர்வமான உறுதி மொழி அளிக்கிறார் நம்மவர்களுக்கு! கூறத் துணிவுண்டா ஓமந்தூராருக்கு?

சந்தா விவரம்

3 மாதம் சந்தா	ரூ	6—0—0
6 மாதம் சந்தா	,,	12—0—0
ஒரு வருடசந்தா	,,	24—0—0

மூன்று மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மானேஜர், 'மாலைமணி'

இனி நடப்பவை

அறந்தாங்கி—இவ்வூர் தி. மு. கழகக் கிளையின் ஆரம்பவிழா 5—11—49 சனி மாலை 6 மணிக்கு தோடி (வ. உ. சி.) திடலில் நடைபெறும். அதுபோது தோழர்கள் என். எஸ். இளங்கோ, என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சென்னிமலை—இவ்வூர் தி. மு. கழகக் கிளையின் துவக்கவிழா, 7—11—49 மாலை 7-30 மணிக்கு நடைபெறும். அதுபோது தோழர்கள் சி. என். அண்ணாத்துரை எம். ஏ, எஸ். ஆர். சுப்ரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

குடியேற்றம் (வ. ஆ.)-12-11-49 சனிமாலை 5 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டமொன்று ஆற்றில் நடைபெறும். அதுபோது தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

* * *

ஆனைமலை—6-11-49 இரவு 9-மணிக்கு இவ்வூர் சின்னகடை வீதியில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபொழுது, தோழர் ஏ. ஜி. வெங்கிடுகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் தோழர்கள் சி. என். அண்ணாத்துரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ஆகியோர் பேசுவர்.

* * *

ஈரோடு—8 11-49 செவ்வாய் மாலை 6-30 மணிக்கு இவ்வூர்காரை வாய்க்கால் மைதானத்தில ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோழுது தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்கள் தலைமையில தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

* * *

பேராவூரணி—7—11—49 திங்கள் அன்று இவ்வூர் தி. மு. கழகக் கிளையின் துவக்கவிழா நடைபெறும். அதுபோது தோழர்கள் என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

பம்பாய்— 6-11-49 இரவு 8-மணிக்கு கொலபா, ஆர்தர் அவுஸ் 1-எண்ணுள்ள இல்லத்தில் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது பல முக்கிய விஷயங்கள் ஆலோசிக்கப்படும் அங்கத்தினரனைவரும் அழைக்கப்படுகிறார்கள்,

திருவொற்றியூரில் தி. மு. க. துவக்க விழா

3—11—49 வியாழன் மாலை 5 மணிக்கு திருவொற்றியூர் சன்னதித் தெருவில் நடைபெறும். அதுபோது,

தோழர்கள்

சி. என். அண்ணாத்துரை,

கே. ஏ. மதியழகன்,

காஞ்சி மணிமொழியார்

ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

தோழர் டி. சண்முகம் தலைமைவகிப்பார்.

திருமணங்கள்

தூத்துக்குடி, அக். ...0—

தோழர் கே குமாரசாமி-தோழியர் க. தாய் திருமணம், 19-10-49ல் தூத்துக்குடி நாடார் தெரு, மணமகன் இல்லத்தில் தோழர் எம் ரத்தினம் தலைமையில சீர் திருத்த முறையில நடைபெற்றது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம், நன்றி! (ஆ—ர)

* * *

எரஞ்சி, அக். 24—

23—10—49 ஞாயிறு காலை எரஞ்சி கிராமத்தில தோழர் சி. முனுசாமி அவர்கள் தலைமையில் தோழர்கள் பாவாடை—சுந்தரி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. திருந்திய திருமணம் என்பது பற்றித் தோழர்கள் ஆதிகேசவன், மு. கேசவன், முதலியோர் பேசினார்கள். துவக்கத்தில தோழியர் பெருமாயி அம்மாள் நாட்டுப் பண்பாடல் பாடினார். அதன் நினைவாக ரூ 2-0-0 வரப்பெற்றோம். நன்றி! (ஆ—ர)

* * *

தஞ்சை இடையாறு, அக், 28—

தோழர் மாரிமுத்துவுக்கும், தோழியர் மாரியம்மாளுக்கும் தோழர் டி. கே மாரியப்பன அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. அது போது தோழர்கள் புலவர் மணிவாசகனார், ஓ. கொ. ப. சுப்பிரமணியம், ஆகியோர் பேசினர். இதன நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி! (ஆ—ர)

* * *

தனுஷ்கோடி, அக், 27—

இவ்வூர் தோழர் எஸ், எம். முகம்மது காசிம் அவர்களுக்கும் தோழியர் பாத்துமுத்து அம்மாளுக்கும் பாம்பனில் 16—10—49 அன்று வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது இதன் நினைவாக ரூபாய் ஒன்றும், அணா ஒன்றும் வரப்பெற்றோம், நன்றி! (ஆ-ர)

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

3—11—49

திருவொற்றியூர் :—	சி. என். அண்ணாத்துரை, கே. ஏ. மதியழகன், காஞ்சி மணிமொழியார்
புதுக்கோட்டை :—	சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி.

4—11—49

புதுப்பட்டணம் :—	என். வி. நடராசன், என். எஸ். இளங்கோ
காட்டுப்புத்தூர் :—	சி. பி. சிற்றரசு

5—11—49

அறந்தாங்கி :—	ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன், என். எஸ். இளங்கோ.
குமரமங்கலம் (சேலம்) :—	ஜி. என். இராஜு

உதவி செய்யுங்கள் உதவி செய்யுங்கள்

இல்லாவிடில் எங்கள் கதி...

சென்னையில் ஆட்சியாளர்கள் இப்போது எங்குச் சென்றாலும், எக்கூட்டமாயினும், பொது மக்களிடம் உதவி கோருவதை வற்புறுத்தும் பிரசாரத்தை இடைவிடாமல் செய்து வருகின்றனர்.

அரசாங்கத்தில் பணமில்லை உதவுங்கள்! மத்திய அரசாங்கம் பணம் தர மறுத்துவிட்டது உதவுங்கள்; நாங்கள் வசூலிக்கும் வழிகளில் பெரும்பகுதி மத்திய அரசாங்கத்துக்குப் போய், அவர்கள் பார்த்து ஒரு சிறு அளவையே மாகாணத்திற்கெனத் தருவதால் உதவி செய்யுங்கள்! அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்து உதவுங்கள்! கள்ளமார்க்கெட்காரர்கள், பதுக்கப் பேர்வழிகள் இவர்களை அரசாங்கம் கண்டுபிடிக்க முடியாது; ஆகவே ஏழைகளைக் கசக்கிப் பிழிகிறோம். ஏழைகளே நீங்கள் அவர்களைக் காட்டிக் கொடுத்து உதவுகள்! விவசாயிகளே நீங்கள் உதவுகள்! சேமிப்புப் பத்திரங்கள் வாங்கி உதவுங்கள்! நீங்கள் கள்ளமார்க்கட்டில் பணம் திரட்டியிருந்தாலும், இலஞ்சம் வாங்கிப் பொருள் திரட்டியிருந்தாலும் பரவாயில்லை. நாங்கள் தரும் பாண்டுகளை வாங்கி அரசாங்கத்துக்கு உதவினால் போதும்! உங்களுக்குப் பணம் எங்கிருந்து வந்ததென்று கேட்கமாட்டோம் என்பது இப்போதைய மத்திய அரசாங்க, மாகாண அரசாங்கங்களின் பாட்டாகிவிட்டது. கிராமபோன் பிளேட் போன்று அமைச்சர்கள் எங்குப்போனாலும் இதையே பேசிக்கொண்டு திரிகின்றனர்.

காங்கிரஸ்காரர்கள் இன்று ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துள்ளனர். அமைச்சர்கள் அத்தனை பேரும் காங்கிரஸ்காரர்கள். சட்டசபை உறுப்பினர்கள் 215 பேரும் ஒன்றிரண்டு முஸ்லிம்களைத் தவிர, பிற அத்தனை பேரும் காங்கிரஸ்காரர்களே. அந்த ஒன்றிரண்டு முஸ்லிம்களைக் கூட எப்படியோ காங்கிரசில் சேர்த்துவிடுவதற்கான முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

எனவே, இந்த வரையில் சுமார் 200 பேர் காங்கிரஸ் ஒலி பெருக்கிகளைப் போல அரசாங்கச் சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கும் பிரசாரகர்களாயிருக்கின்றனர். இவர்கள் போதாவென்று இங்கு நடைபெறும் பத்திரிகைகள் ஒன்றிரண்டு தவிர அனைத்தும் காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பவைகளாகவே இருக்கின்றன.

இவை தவிர, அரசாங்க அதிகாரம் இருக்கிறது; அடக்குமுறைச் சட்டங்கள் இருக்கின்றன, நீதிஸ்தலத்துக்கும் கட்டுப்படாத பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது; போலீஸ் படை இருக்கிறது.

இவ்வளவு மகத்தான பிரசார சக்தியை வைத்துக்கொண்டிருக்கும் அமைச்சர்களுள் ஒருவரான பரமேஸ்வரன், தென்னிந்திய சினிமாக் கலை நிபுணர் சங்க 6-வது மாநாட்டில் சென்னை ஜெமினி ஸ்டுடியோவில் பேசிய போது, "அரசாங்கம் என்ன செய்தாலும் அதை மக்கள் சரியாகப் புரிந்து கொள்வதில்லை அரசாங்கத்துக்குச் சரியான பிரசார ஸ்தாபனம் இல்லாதபடியால், விஷமிகளின் துவேஷப் பிரசாரம் எளிதில் நடக்கிறது. இத்துறையில் சினிமாத் தொழிலாளர் அரசாங்கத்துக்கு உதவினால், அரசாங்கத்தினர் இத்தொழிலுக்கு உரவித் தம்மாலியன்றதைச் செய்வர்."

என்று கூறியுள்ளார். எனவே அமைச்சர் பிரசார பலம் போதவில்லை யென்று சினிமாக்காரர்களையும் மிரட்டித் தங்களுக்கு உதவிபுரியுமாறு அழைக்கிறார். ஆனால், இவர்களுக்கு எதிரிகளாயுள்ள கட்சியினரோ, காங்கிரஸ்காரர்களுக்கிருக்கும் பிரசார பலத்தில் 100க்கு 1விகிதம்கூடப் பலம் பெற்றவர்களாக இல்லை. இந்த நிலையிலுள்ள எதிர்க் கட்சிக்காரர்களைக் கண்டு காங்கிரஸ் ஆட்சிப்பீடம் அஞ்சுகிறதென்றால், கிடைக்கும் சாக்கு அனைத்தையும் எதிர்க் கட்சி மீது வீசத் துணிகிறதென்றால், எதிர்க் கட்சியை அடக்கக் காங்கிரசுக்குப் பிரசார உதவி செய்தாலன்றிச் சினிமாத் தொழிலுக்கே உதவி செய்ய முடியாதென்ற மிரட்டலில் சினிமாத் தொழிலாளின் உதவியைக் கோருகின்றதென்றால், காங்கிரஸ் ஆட்சிப்பீடத்தின் நிலைமை என்னென்பது? மைசூர் போக, பிளானல் சட்டை அதற்குமேல் கம்பளிக்கோட்டு உல்லன் சால்வை, பிளானல் மப்ளர் இவ்வளவிருந்தும் அறையில் மின்சாரச் சூடுண்டாக்கி இவ்வளவு ஏற்பாடுகளும்செய்து வைத்துக்கொண்டு, உடலில் சூடேற்ற மருந்தும் ஒரு புட்டி கைவசம் இருக்கவேண்டும். என்று கேட்பவன் யாராக இருக்க முடியும்! நோயாளிக்குத்தானே அல்லது வலிமை இழந்தவனுக்குத்தானே அல்லது இரத்த ஓட்டத்தில் குறைபாடு உள்ளவனுக்குத்தானே இவ்வளவு முஸ்தீபுகள் தேவை!

எனவே, காங்கிரஸ் ஆட்சிப்பீடத்தின் முஸ்தீபைக் கவனிக்கும் போது, அதன் உடலில் என்னென்னவோ கோளாறுகள் இருக்கின்றன வென்பதும், வலிமையற்ற காரணத்தால் அது செய்யும் வேலை பிறருக்கு நன்மைக்குப்பதில் தீமை பயில்வதாகவே இருப்பதால், மக்கள் அதை நன்குஉணர்ந்துகொள்ளுகின்றனரென்பதும், இவ்வாறு மக்களே உண்மையை உணராதிருக்குமாறு செய்யவே, இந்த ஏற்பாடுகள் வேண்டுகோள் மிரட்டல்கள் முதலியவற்றைக் காங்கிரஸ் ஆட்சிப்பீடம் செய்து வருகிறதென்பதும் நன்கு தெளிவாகின்றன அல்லவா?

அரசாங்கம் செய்வதை மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதும், விஷமிகளின் துவேஷப் பிரசாரம் நடக்கிறது என்பதும் பொருளற்ற பேச்சு. மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளும்படியான நல்ல வேலைகளைக் காங்கிரஸ் ஆட்சிப்பீடத்துக்கு செய்யத் தெரியவில்லை என்பது விளங்கவில்லையா? மக்கள்புரிந்து கொள்ளும்படியான வேலை செய்வதற்காகத் தானே மக்கள் வரிப் பணத்தைச் சம்பளமாக வாங்கிக் கொண்டிருக்கும் இந்த அமைச்சர்கள் ஆட்சிப்பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர். அதைவிட்டுஇவர்கள் செய்யும் வேலைகளை மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும் என்பது எந்த வகையில் நியாயம்? இதிலிருந்து என்ன விளங்குகிற தென்றால் பொது மக்கள் சரியாகப்புரிந்துகொள்ள முடியாத வேலைகளை யெல்லாம் பொது மக்கள் சார்பிலுள்ள இவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, எதிர்க்கட்சியினர் இவற்றை விளக்கும் போது மக்களுக்கு இன்றைய காங்கிரஸ்காரர்களின் வண்டவாளம் புரிந்துவிடுகிறது. பொது மக்கள் வெறுப்பேற்பட்டால், அடுத்த தேர்தலில் வெற்றி பெற முடியாது. அடுத்த தேர்தலோ விரைந்து வந்து கொண்டிருக்கிறது. எனவேதான் அடுத்த தேர்தலுக்குள் நாட்டில் எதிர்க்கட்சியே இல்லாதபடி செய்துவிடவும், மக்கள் ஆட்டுக்குட்டிகள் போலப் பேசாதிடக்கவும் செய்வதற்காக மந்திரிகளுட்பட காங்கிரஸ் ஒலி பெருக்கிகள் இப்போது முதலே பிரசாரத்தில் இறங்கிவிட்டன. கடும் அடக்கு முறைகளினால் எதிர்க்கட்சியினரை அழுத்தி வைக்கும் வேலை தொடங்கப் பட்டுவிட்டது, இதுதான் காங்கிரஸ்காரர்களின் இன்றைய உண்மையான நிலை என்பதை அமைச்சர் பரமேஸ்வரன் சினிமாத் தொழிலினரை மிரட்டுவதன் மூலம் நன்கெடுத்துக் காட்டி விட்டிருப்பதற்காக அவரைப் பாராட்ட வேண்டும்.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

அண்ணாமலை நகர்

அண்ணாமலை நகர், அக். 25— 23—10—49 பகல் 12-30 மணி வண்டியில் தோழர் ஈ. வெ. கி. சம்பத், குடந்தை எஸ். கே சாமி ஆகியோர் சிதம்பரம் வந்து சேர்ந்தனர். உடனே அவர்களை அண்ணாமலைநகருக்கு அழைத்துச் சென்றனர். புலவர் திருநாவுக்கரசு, சாமிநாதன், தில்லை. வில்லாளன் ஆகிய மாணவத் தோழர்களும் நாராயணசாமி, விசுவநாதன் பிச்சைமுத்து, இராமமூர்த்தி இன்னும் பல கழகத் தோழர்களும் வரவேற்று உபசரித்தனர். மாலை 4 மணிக்கு அண்ணாமலை நகரைச் சேர்ந்த தெற்கிருப்பில், திராவிட முன்னேற்றக் கழகச் சிற்றூர்க் கிளையின் துவக்கவிழா ஆரம்பமாயிற்று. இபக்கத் தோழர் ஒருவர் திராவிட நாட்டுப்பண் பாடினார். தோழர் பிச்சமுத்து, புலவர் திருநாவுக்கரசு அவர்களைத் தலைமை யேற்று நடத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தலைவர் முன்னுரையாகச் சில வார்த்தைகளைக் கூறிக் குடந்தைத் தோழர் எஸ். கே சாமியைக் கொடியை உயர்த்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டார். வீரந்ததும்ப, உணர்ச்சி வழிய அவர் அரைமணி நேரத்திற்கு மேலாக ஆரியத்தின் கொடுமையைப்பற்றிப் பேசிக் கொடியின் விளக்கத்தையும் கூறிக் கொடியை உயர்த்தினார். பிறகு தில்லை—வில்லாளன் திராவிடர் கழகம் மாறி திராவிடர் முன்னேற்றக் கழகம் ஏன் எப்படி வந்தது என்பது குறித்துப் பேசினார். அடுத்துத்தோழர் ஈ. வே. கி. சம்பத் அரசியல் பிரச்சாரம் இலக்கியப் பிரச்சாரம் ஆகியவைகளுக்குரிய வித்தியாசங்களைக் கூறி முன்னேற்றக் கழகம் அரசியல், சமுதாயம் பொருளியல் ஆகிய மூன்று மூலைகளில் போராடப் போகிறது என்று விளக்கிப் பேசினார் தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் நாராயணசாமி நன்றி கூற விழா இனிது முடிந்தது. கூட்டத்திற்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர்களும், ஏராளமாகப் பெண்களும் வந்திருந்தார்கள். குறைந்த கால ஏற்பாட்டிலும் இவ்வளவு சிறப்பாகக் கூட்டத்தை ஏற்படு செய்த தோழர்கள் அனைவரும் பாராட்டுக் குரியவர்கள் [வி—உ]

இராசாக்கவுண்டன் பாளையம்

இராசாக்கவுண்டன்பாளையம், அக். 18— 16-10-49 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு இவ்வூர் சாவடியில் மாகாணப் பொதுக்குழு உறுப்பினர் திருச்செங்கோடு தோழர் என். கே. பி. வேல் அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்ற வாலிபர் கழகத் துவக்க விழா நடைபெற்றது. ஷை விழாவில் அருப்புக்கோட்டை தோழர் எம் எஸ் இராமசாமியும் கோபித் தோழர் ஜி. என். இராசுவும் மற்றும் திருச்செங்கோடு தோழர்கள் என். பி. சதாசிவம் தோழர் டி. கே. இராமசாமி மற்றும் பல அன்பர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத் தலைவர் தனது முன்னுரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்த நமது முன்னாள் தலைவர் பெரியார் அவர்களது பொருந்தா திருமணத்தை பற்றியும் இனி நமது கழகத்தை நடத்திச்செல்லவேண்டிய முறை வகைகளைப் பற்றியும் பேசிய பின்னர், அருப்புக்கோட்டைத் தோழர் எம். எஸ். இராமசாமி தனது சொற்பொழிவில் இந்த ஊரில் பெரும்பாலும் கைத்தறித் தொழிலாளர்கள் இருப்பதால் இன்று அரசியலார் கைத்தறித் தொழிலாளர்களை, ஏறெடுத்துப் பார்க்காமல் இருப்பதாலும் மற்றும் கைத்தறிக்காரர்கள் என்னவிதமாக நடக்கவேண்டும் என்பதாகவும் மிகவும் உருக்கமாகப் பேசி, தனது உரையை முடித்தார். அடுத்துப் பேசிய தோழர் கோபி ஜி. என். இராசு அவர்கள், இன்றைய சர்க்கார் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான சலுகையையும் காட்டவில்லை என்றும், அவர்களால் காட்ட முடியாத நிலையில் அமைப்புமுறை இருக்கின்றது என்றும், நாட்டில் திராவிட கழகத்திற்கும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்தவிதமான மோதுதலோ சச்சரவோ ஏற்படாது என்றும் அப்படி ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்ப்பவர்கள் நிச்சயமாக ஏமாறுவார்கள் என்றும், மிகவும் மேற்கோள்கள் காட்டிப் பேசினார்.

திண்டிவனம்

திண்டிவனம், அக். 27— 23—10—49 திண்டிவனம் நகர்க் கிளை, கவேரிப்பாக்கம் உட்கிளைக் கழகங்களின் துவக்க விழா நடைபெற்றது. மாலை 6-மணிக்கு ஊர்வலம் முக்கிய தெருக்களின் வழியாக சென்று காவேரிப்பாக்கம் பெரியார் இடலில் வந்தடைந்து, மாலை 6-30 மணிக்குத் துவக்க விழா ஆரம்பிக்கப்பட்டது. விழாவில் பெருந் திரளான மக்கள் ஆண்களும், பெண்களும், மாணவர்களும் திரண்டு குழுமி இருந்தனர். தோழர் சேலம் கலாமணி அவர்களால் திராவிட நாட்டுப்பண் பாடப்பட்டது. தோழர் தங்கவேலு அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவசியத்தை விளக்கிக் கூறி மக்களை வரவேற்றத் தோழர் அப்பாண்டநாதன் அவர்களைத் தலைமை வகிக்கும்படிக் கேட்டுக்கொண்டார். தோழர் அப்பாண்டநாதன் அவர்கள் முன்னுரையாகப் பெரியாரின் பொருந்தாத் திருமணத்தால் வேதனை அடைந்ததை விளக்கினார்.

தோழர்கள், சேலம் கலாமணி, கலைமணி அமிர்தவாசகம் முதலியோர் பெரியார் பகுத்தறிவுக்கொள்கைக்குப் புறம்பாக பொருந்தாத் திருமணம் செய்துகொண்டதே முன்னேற்றக் கழகம் தோன்றக் காரணம் என்றும், அண்ணாவின் மயக்கு மொழி அல்லவென்றும், சமுதாய சீர்திருத்தம் பற்றியும் பேசினர். பின்னர் மூதாட்டியார் இராமாமிர்தத்தம்மையார் பெரியாரின் பொருந்தாத் திருமணத்தின் வேதனையாலேயே தன்னைப் போன்றவர்கள் திராவிடக் கழகத்திலிருந்து விலகி முன்னேற்றக் கழகத்தில் பணியாற்ற தொடங்கியுள்ளோமென்றும், பெண்கள் சமுதாயப் புரட்சியிலே மட்டும் முதலிலே திருந்தினால், ஆண்களை ஒரே நாளில் திருத்தி விடலாமென்றும் இந்நாட்டுப் புராணங்களில் பெண்களை இழிவுபடுத்தி எழுதி வைத்திருப்பதை விளக்கி உணர்ச்சி ததும்ப சுமார் ஒரு மணி நேரம் பேசினார்கள் பின்னர் செயலாளர் தோழர் பாண்டுரங்கம் அவர்கள் நன்றி கூற இரவு சுமார் 10-30-க்கு வாழ்க வளமார் திராவிடம் என்ற பாட்டுடன் கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

கம்பம்

கம்பம், அக். 28— 27-10-49ம் தேதி கம்பம் தி. மு கழகம்-துவக்க விழா தோழர் பி. டி. சோான் அவர்கள் தலைமையில் புலுகு நடராஜன் அவர்களின் நாட்டுப்பண் பாடலுடன் ஆரம்பமாயிற்று. அவ்வமயம் திருச்சி தோழர் இரா. துரைராசன் அவர்கள் மிக அழகாகவும், தெளிவாகவும், மாற்றுக் கட்சியினர் விடுத்த கேள்விகளுக்கு, தெளிவுரையுடன் விளக்கம் தெரிவித்தும், பொது மக்களுக்கு அறியாமையகல வேண்டியதின் அவசியம் குறித்து வற்புறுத்தியும் சொற்பெருக்காற்றி மகிழ்வித்தார். பின்னர், நன்றிகூற "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற வாழ்த்தொலியுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. (வி-உ)

தேர்தல் பிரசாரம் :: :: துவங்கிவிட்டது

அரசாங்கச் செலவில் அமைச்சர்கள் செய்யும் தொண்டு

சென்னைமாகில அமைச்சர்கள் கிளம்பிவிட்டார்கள் தேர்தல் பிரசாரத்துக்கு. 1951-வது ஆண்டு வரவிருக்கும் பொதுத் தேர்தலுக்கு இன்றே துவஜாரோகணம் செய்துவிட்டார் தோழர் காமராஜர். எதிர்க்கட்சிகளை அடக்குவது, அழித்து ஒழிப்பது, மக்கள் மனத்தில காங்கிரஸ ஊழல்களை எடுத்துக் காட்டிப் பதியவைக்கும் ஏடுகள், நூல்கள், நாடகங்கள் முதலியவற்றை அடக்குவது முதலிய பூர்வாங்க வேலைகளும் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. பொது மக்களிடம் ஓட்டு கேட்கும் கோடி நடவடிக்கையும் துவக்கப்பட்டு விட்டது.

காரைக்குடியில் நடந்ததொரு பொதுக் கூட்டத்திலே, “46-ஆம் ஆண்டுத் தேர்தல் வாக்குறுதிகளைக் காங்கிரஸ் நிறைவேற்றிவிட்டது. நமக்குச் சுதந்தரம் வாங்கித் தந்த காங்கிரஸை ஆதரிக்க வேண்டும். காங்கிரஸைப் பற்றி மற்றக் கட்சிகள் செய்யும் பிரசாரங்களுக்கு அர்த்தமில்லை. 1951-வது ஆண்டில் நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலில் நீங்கள் எந்தக் கட்சியை விரும்புகிறீர்களோ அந்தக் கட்சிக்கு ஓட் போடவேண்டும். ஆனால் காங்கிரஸைத் தவிர, வேறு எந்தக் கட்சியாலும் இந்தியாவுக்கு விமோசனம் தேடித் தரமுடியாது.”

என்று காமராஜர் பேசியிருக்கிறார். மந்திரிகளும் ஆங்காங்கே புறப்பட்டுவிட்டனர் இவ்வாறு பேசவும் காங்கிரஸ் சாதித்துள்ள நன்மைகளை எடுத்து விளக்கவும்.

அமைச்சர் பக்தவத்சலனார் அதே காரைக்குடி பொதுக்கூட்டத்தில் பேசுகையில், அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை என்ற மக்களின் குறைபாட்டிற்குச் சமாதானம கூற முயன்றுள்ளனர். அவர் என்னகாரணங்கள் கூறியிருக்கிறார் தெரியுமா?

1. அரசாங்கம் ஏழைமக்களுக்கு, குறிப்பாகக் கிராமவாசிகள் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வருகிறது. அதன் பலனை நீங்கள் அனுபவிக்கத்தான் செய்கின்றீர்கள்.

2. நம் குறைகள் அதிகம். அதற்குக் காரணம் நாம அன்னியர் ஆட்சியில் பட்ட கஷ்டம். அன்னியர் காலத்தில் வறுமையில் அவதிப்பட்டோம். இப்போது வாழ்க்கைத் தரம் உயரப் பாடுபடுகிறோம்.

3. நாம் செய்தவை சில. செய்ய வேண்டியவை பல. அரசாங்கம் சும்மா இல்லை முடிந்தவரை, அகதிகள் பிரச்னை, உணவுப் பிரச்னை முதலியவற்றைத் தீர்த்து வருகிறது. மக்கள் நலனுக்குப் பாடுபட்டு வருகின்றது.

இவற்றுள் அரசாங்கம் செய்துள்ள முன்னேற்ற வேலையின் பலனை, மக்கள் அனுபவிக்கின்றனர் என்பது உண்மைதான். பசி பசி என்ற கூச்சலும், உடையில்லை பிழைக்க வழியில்லை வேலையில்லை என்ற கூச்சலும் எங்கு நோக்கினும் மக்களுடைய அனுபவமாக இருக்கின்றது. ஆனால பணக்காரர்கள், முதலாளிகள் ஆகியோர் எது எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன என்று சுகமாக வாழுகின்றனர். காங்கிரஸ்காரர்கள் ஆட்சிப் பீடத்தமர்ந்தபின், கள்ளமார்க்கெட்டில் கொள்ளையடிக்கும் மனப்பான்மை வளர்ந்து விட்டதென்பது மக்களின் அனுபவமாயிருக்கிறது என்பது உண்மையே.

அன்னியர் ஆதிக்கத்தில் வறுமைக்குள்ளான நம்முடைய வாழ்க்கைத் தரத்தை உயர ஆட்சிப் பீடம் பாடுபடுவதாகக் கூறப்படுகிறது. இதுவும் சரிதான். வெள்ளையர் ஆட்சிக்கும இப்போதைய ஆட்சிக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உள. வெள்ளையர் ஆட்சியில் அனுமதேயங்களாக இருந்த சிலகாங்கிரஸ்காரர்கள் இன்று லட்சாதிபதிகளாயினர். இந்தப் பட்டியலைச் சட்டசபையிலேயே எளிதில் தயாரிக்கலாம. இப்போது வாழ்க்கைத்தரம் உயருகிறது. 10-ஆண்டுகளுக்கு முன் இருந்த விலைவாசிகளுக்கும் இப்போதைய விலைவாசிகளுக்கும் வேறுபாட்டைப் பார்த்தாலே வாழ்க்கைத்தர உயர்வின் மர்மம விளங்குமே. ஏழைமக்களின் சராசரி வருமானம், விலைவாசிகளால் ஏற்படும் சராசரிச் செலவு போட்டுப் பார்த்தால் வாழ்க்கைத்தரவுயர்வின் மர்மம் விளங்கிவிடுமே.

மூன்றாவதாக அமைச்சர் அழகுபட அகதிகள் பிரச்னை தீர்ந்ததென்கிறார். இவர் கூறும் அகதிகள் வடநாட்டிலிருந்து ஓடிவந்தவர்கள். இவர்களுக்கு வாழ்க்கை நடத்தப் பணம் உதவி, குடியிருக்க வசதிகள் செய்தளித்தது உண்மைதான். ஆனால், பர்மாவிலிருந்து ஓடிவந்த நம் நாட்டு அகதிகள், வெளிநாடுகளிலிருந்து விரட்டப்பட்டு இங்கு வந்து சேரும் நம்நாட்டு அகதிகள், உள்நாட்டிலேயேசோறு கிடைக்காமல் ஜில்லாவுக்கு ஜில்லா நாடோடிகளாய்த் திரியும் நம் அகதிகளுக்கு என்னென்ன நலன்கள் செய்யப்பட்டிருக்கின்றன!

எனவே, தோழர் காமராஜர் கூறுகிறபடி எதிர்க்கட்சிகள் கூறும் குற்றச்சாட்டுகள் அர்த்தமற்றவை என்று கூறிக்கொண்டு அவற்றிற்கெல்லாம் பதில் கூறமுடியாமல், (முயன்றால் முடியாதே) தேர்தல் காலத்தில் காங்கிரஸ்காரர்கள் திட்டம் தரும் வழக்கம்போல, இப்போதும் பிரசாரத் திட்டங்கள் வேலைத் திட்டங்கள் முதலியகருவிகளுடன் தேர்தல் காலத்தில் மந்திரிகளும் காமராஜரும் இறங்கிவிட்டார்கள். எதையாவது கூறி மக்கள் மனத்தை என்றும் அடிமைப்படுத்தி வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்னும் கலையில் தேர்ந்தவர்களாதலின் காங்கிரஸ்காரர்கள். அக்கலையைப் பயன்படுத்தி இம்முறையும் வெற்றிபெற வேண்டுமென்று கருதியிருக்கின்றனர்.

இல்லையென்றால் இந்த காலத்தில் அறிவு வளர்ந்திருக்கும் இந்த நாளில், திருவாரூர் தியாகராஜருக்கு, கருவறையில மின்சார விளக்குப் போட்டதால் உடம்பெரிச்சல் ஏற்பட்ட கதையும், குற்றாலத்தில் பராசக்தியின் அருளால் ஊமைப் பெண் பேசிய விவரமும் பத்திரிகையில் விளம்பரப் படுத்தப்படுமா? மக்களை மேலும் மடமையில் ஆழ்த்திவைப்பதல்லாமல் இவ்விளம்பரங்களுக்கு வேறு காரணம் இருக்க முடியுமா?

தொழிலாளர் வாரம்

அக்டோபர் 31-ம் நாள் முதல் நவம்பர் 7-ம் நாள்வரை “தொழிலாளர் வாரம்” அனுசரிக்க வேண்டும் என்று அனைத்திந்திய தொழிற்சங்க காங்கிரஸ் முடிவு செய்திருக்கிறது. நவ. 7-ம் நாள் “புரட்சி தினம்” அனுசரிக்கப்பட்டு முடிவு பெறும் என்று தெரிகிறது. இந்த ஏழு நாட்களையும், “அடிப்படை கோரிக்கை தினம்”, “தியாகிகள் தினம்” ‘காவல் கைதிகள் உதவி நிவாரண நிதி தினம்” “வேலையின்மை எதிர்ப்பு” “எல்லோருக்கும் வேலை தினம்” என்று ஒவ்வொரு தினமாகக் கொண்டாடப்படுமெனத் தெரிகிறது.

முன்னாள் ...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

நாட்டாரை எதிலும் சேரவிடக் டாது உள்ளே நுழையவிடக்கூடாது என்ற மனப்பான்மையே அதிகமாயிருக்கிறது என்பதையும் இம்மனப்பான்மை அ. இ. சபையிலேயேக ஏற்பட்டதென்பதையும் ஓமந்தூராரே கூறுகிறார். எனவே, அங்கே போய்ப் பேசப் பழகுவது எப்படி முடியும்? யார் பேசப் பழக்கித் தருவர்.

ஓமந்தூரார் கூறியபடி இந்திபேச முடியாமல் படித்த பேர்வழிகளில் கூடத் தமிழ்நாட்டவரின் எண்ணிக்கை மிகக் குறைவு. தெலுங்கர், கன்னடர், கேரளர் சேர்ந்தகணக்கே 15-லட்சம்.

எப்படியிருக்கிறது இந்தியின் இலட்சணம. ஓமந்தூரார் காட்டியபடியே பார்த்தாலும் அதன் இலட்சணம் நன்கு விளங்குகிறதே!

எனவே, வடநாடு சென்றுபேசப் பழகவேண்டியிருக்கும் இந்தியைத் தமிழ்நாட்டில் சிறுவர்களிடையே வற்புறுத்திக் கட்டாய பாடமாக்கி வைக்கவேண்டாம் என்ற கிளர்ச்சி “துவேஷத்தால் ஏற்பட்டது” என்று அவர் கூறுவாரென்றால் அவருடைய புரிந்துகொள்ள முடியாத நிலை முற்றிவிட்டது என்பது தவிர வேறு என்ன கூறமுடியும. தக்க ஆதாரங்களுடன் புள்ளி விவரங்களுடனும் நாட்டு நலனில் அக்கரையுடனும் காட்டப்படும் விஷயத்திற்குத்துவேஷமென்பது பெயரானால், அந்தத் துவேஷம் நாடு முழுவதும் பரவுவது நல்லதாயிற்றே. ஓமந்தூராரின் துவேஷமில்லாச செயலால் நாடு உருக்குலைவதைவிடத் துவேஷத்தால் நாடு உருப்படுமென்றால், அதைத்தானே அறிவுடையோர் விரும்புவர்.

கடைசியாக, ஓமந்தூரார் புரிந்துகொள்ளமுடியாமல் கூறியிருக்கும் செய்தி—நாட்டு மக்களில் 3-ல் 2-பங்கினர் இந்தி பேசுகின்றனர் என்பது. இது அடியோடு தவறானது என்பது பன்முறை எடுத்துக் காட்டப்பட்டுவிட்டது. இந்தியா நாடு முழுவதற்கும் மத்திய மாகாணம், ஐ. மாகாணம் தவிர, இந்திபேசும் மாகாணங்கள் பிற எதுவுமில்லை என்பதை ஓமந்தூரார் அறியார் போலும்! 3-ல $\frac{1}{2}$-பங்கினர் பேசுவதுதான் இந்திமொழி. எனவே, தவறான விவரங்களையும் வாதத்தையும். கருத்துக்குமாறுபட்டவர்கள் மீது வீண் பழிகளையும் நிந்தனைகளையும் கூறித் தங்கள் மனதுக்குச் சாந்தியளிப்பதைவிட உண்மையிலேயே நாட்டுப் பற்றுகொண்டு நாட்டு மக்களின் நன்மையில், நல்வாழ்வில் அக்கரைக்கொண்டு, நம தமிழ்நாட்டுத் தாய்மொழியாகிய தமிழை அரசாங்க மொழியாக்கி, இந்தியை விரும்புகிறவர்கள் படித்துக் கொள்ளலாம் என்று விதியமைப்பதே ஒழுங்கான முறையாகும். வீணிற் படித்துக்காலத்தையும் நேரத்தையும் பணத்தையும் நாட்டு மக்கள் அனைவரும் பாழாக்கிக் கொண்டிருப்பதைவிட, வடநாடு சென்று இந்திமொழியாருடன் நெருங்கிப் பழகிப் பேசக் கற்றுக்கொள்ளும் வசதியும் வாய்ப்பும் உடையோர் அதைப் படித்துக் கொள்ள வேண்டும் என்று விதிக்கலாம். வட இந்தியாவில்வேலைதேட வேண்டியவர்கள் அதைப் படித்தாக வேண்டும என்று அரசாங்கம் கட்டளையிடலாம். அதைவிட்டு நாட்டு மக்கள அனைவரையுமே இந்தி பலிபீடத்தில் வைத்துப் பலிதர வேண்டுமென்பது நியாயத்துக்கோ, அறிவுக்கோ பொருத்தமானதாக இல்லை.

ஓமந்தூரார் மீண்டும் ஒருமுறை நன்கு சிந்தித்து, மீண்டும் இவ்வாறெல்லாம் பேசித் தீர்க்காமல் நாட்டு மக்களனைவரின்நலத்தையும் கருத்தில்கொண்டு, கட்சிப் பித்தை ஒதுக்கிவைத்து, எவர் சொன்னாலென்ன நல்லவற்றை ஏற்பது என்னும் பரந்த நோக்கத்துடன் பணியாற்றிவர வேண்டுகிறோம்.

எண்ணம் உயர்ந்ததுதான்

—(0)—

ஆனால் செயலில் நடக்குமா?

“சென்னைமாகிலத்தில் மதத்தைச்சார்ந்த மடங்கள், கோயில்கள் முதலியவற்றின் ஆதிக்கத்தில் மொத்தம் 23,000 பெரிய கட்டிடங்கள் இருக்கின்றன. இவை பலரால் எழுதிவைக்கப்பட்ட தர்ம சொத்துக்கள், இவற்றைப் பொதுநல வேலைகளைச் செய்வதற்குப் பயன்படுத்தலாம் என்று நான் யோசனை கூறுகிறேன்.”

என்று சுகாதார மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் எல்லூரில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நாம் நீண்ட காலமாகக் கூறி வருவதன் கருத்து இதுதான்.

கோவில்களுக்கும் மடங்களுக்கும் தர்மமாகச் சொத்துக்கள் எழுதி வைத்தவர்களுடைய நோக்கம், அவற்றின்மூலம் பொதுமக்கள் நல்வாழ்விற்குத் தொண்டாற்றவேண்டும் என்பதாகும். ஒருகாலத்தில், தேர் திருவிழாக்கள் மூலமாகவும், சமயபோதனைகள் மூலமாகவும் மக்களுக்குச் சுகாதாரம் முதற்கொண்டு வாழ்க்கைநெறிகள் பலவற்றைக் கற்பிக்கவேண்டிய அவசியம் நேரிட்டிருந்தது. அதேபோன்று சமயத்துறை மூலம் பணிசெய்வதற்காகப் பல செல்வர்கள் கோவில்களுக்கும் மடங்களுக்கும் சொத்துக்களை எழுதிவைத்தனர்.

ஆனால் இன்றோ, கோவில்களும் மடங்களும் மக்கள் மனத்தில் மாசுபோக்கி, அவர்களை உயர்நெறியில் திருப்புவதற்குப் பதிலாக, மக்களை மாசுபடுத்தி, அவர்களை ஒழுக்கக் கேட்டில் திருப்புவதற்கு வழிகாட்டிகளாயிருக்கின்றன. இவற்றின் போக்கைக் காணும் மக்கள் திருந்துவதற்குப்பதில் வழிகேட்டினைத்தான் அடைந்து வருகின்றனர் சமயத்துறை இக்கால மக்களை எவ்வகையிலும்உயர்த்த முடியவில்லை என்பது கண்கூடு எனவே, கோவில்களிலும், மடங்களிலும் முடங்கிக் கிடக்கும் சொத்துக்களனைத்தும், பொதுமக்களுடைய வாழ்க்கை உயர்வுக்கான வழிகளில் செலவிட ஆட்சிப்பீடம் அமர்ந்துள்ளோர் துணிந்து முன்வரவேண்டும் இதை நாம் பல்லாண்டுகளாக விளக்கிக் காட்டிவந்துள்ளோம்.

ஆனால், இன்றுங்கூட ஆட்சிப்பீடம் அமர்ந்தோர் இத்துறையில் கவனம் செலுத்தவில்லை. இன்னும் மக்களை மூடர்களாக்கிவைத்து, அவர்களுடைய மூடத்தனத்தைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொள்ளவே முயலுகின்றனர். சில அமைச்சர்களுக்கே ஆண்டவன் சொத்தைத் தேர் திருவிழாக்களில் அன்றி வேறு காரியங்களில் செலவிடுவதா என்னும் புராண எண்ணம் இருந்துவருவதாகத் தெரிகிறது. எனவேதான் இத்தகைய முற்போக்கு இனங்களில் அவர்கள் கவனம் செலுத்தவில்லை.

எனினும் அமைச்சர் ராஜன் அவர்கள் ஓரளவுக்காவது முன்வந்து மடங்கள் கோவில்களின் கட்டிடங்களையாவது பொதுநலத் துறைகளுக்குப் பயன்படுத்தலாம் என்று யோசனை கூறும் அளவுக்காவது துணிந்திருப்பது உண்மையில் பாராட்டுக்குரியதுதான். ஆனால் மக்கள் மனப்பான்மை வளர்ந்துள்ள இக்காலத்தில், இவ்வாறு யோசனைகள் கூறுவதும், செய்தே தீரவேண்டுமென்று மேடைகளில் பேசிவிட்டால் போதுமா? இவற்றைச் செயலில் கொணர்ந்து நிறைவேற்றி, சோம்பிக் கிடக்கும் செல்வத்தைச் சுறுசுறுப்பான வழிகளில் மக்களைத் திருப்பப் பயன்படுத்த வேண்டுமல்லவா? அரசாங்கம் முனையவேண்டும்!

காங்கிரஸ்காரர்கள் என்ன செய்கின்றனர்?

காங்கிரஸ் தூண்போன்றவர் தரும் தகவல்

“காங்கிரஸ்காரர்கள் இக்காலத்தில் ஒரு வேலையும் செய்வதில்லை. வேலை செய்யாதிருக்கிறவர்கள் வேலை செய்பவர்களுக்கும் இடந் தருவதில்லை, இன்றைய காங்கிரஸ்காரர்கள்நிலை இதுதான்”

—ஓமந்தூர் இராமசாமி (ரெட்டியார்)

பட்டாளம் பெருகுகிறது!

நடப்பது மக்களாட்சி என்கின்றனர் நமது காங்கிரஸ் அரசியலார். இந்த மக்களாட்சியின் மகத்துவத்தைப்பாருங்கள். தொழிற்சாலைகள் பல திறக்கப்படுவதற்குப் பதிலாக, பல தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிவதற்குப் பதிலாக வேலையில்லாதார் பட்டாளம் பெருக ஆரம்பித்திருக்கிறது. இது நாமாகக் கூறும் தகவல அல்ல. அரசியலாரே தரும் விளக்கம் இதோ இந்திய சர்க்காரின் உத்தியோகம் தேடித் தரும் இலாக்கா அதிகாரி கூறுவதைக் கேளுங்கள்:

“சர்க்காரின சிக்கன இயக்கம், பல மில்கள் அடைப்பு, தொழிற்சாலை அபிவிருத்தித் திட்டங்கள நிறுத்திவைப்பு, ஆகியவை காரணமாக செப்டம்பர மாதத்தில் வேலையில்லாதிண்டாட்டம் முந்திய மாதத்தைவிட சற்று அதிகமாக இருக்கிறது”

என்று கூறியிருக்கிறார். அதாவது வேலையில்லாமல் திண்டாடும் பட்டாளம் நாளுக்கு நாள் பெருகுகிறது என்பதையே இவ்வறிக்கை காட்டுகிறது.

அறிவிப்பு

ரெஜிஸ முட்டை பவுடர், முட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணு ஸ்டாம்பு அனுப்பவும். G. பழனியப்ப முதலியார், மதுரை.

அரசியல் உலகிலே ஓர் அதிர்ச்சி !!

“ஏழையின் அரசியல்”

(எஸ். சதாசிவம்)

விலை அணா எட்டு

தபாலில் பெற 0—9—0 ஸ்டாம்பு அனுப்பவும்.
விற்பனையாளர்களுக்கு 20·/. கழிவு.

இன்பவாழ்வுப் பதிப்பகம், ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்.

கழகம் உண்மை உழைப்பாளிகளின் கூட்டுப் பண்ணை

'சதிக்குக்' கேடயம் திருமணமா?

குடந்தையில் டி. கே. சீனிவாசன்

குடந்தை, அக். 25—

21—10—'49 வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்குப் பன்னீர்செல்வம் சமரச வாசகசாலையின் சார்பில், கொடியேற்று விழா நடைபெற்றது. வாசகசாலைத் தலைவர் தோழர் எஸ். பி. சாமி தலைமைவகித்தார். மழை பெய்துகொண்டிருந்துங்கூட மக்கள் ஏராளமாகக் கலையாமல் நின்று கொண்டிருந்தனர்.

டி. கே. சீனிவாசன்

அப்போது தோழர் டி. கே. சீனிவாசன் பேசிய பேச்சின் சுருக்கம் :—

"தலைவரவர்களே, தோழர்களே!

என்னைக் கொடியேற்றி வைக்கும்படி கேட்டுக்கொண்ட தலைவர் தீபாவலிப் பண்டிகையைப் பற்றியும் பேசச் சொன்னார். மற்ற தீபாவலிகளை விட இந்தத் தீபாவலி நமக்குச் சற்று அதிகமான அளவு துன்பத்தையுந் துக்கத்தையுந் தான் தந்திருக்கிறது. நம் இயக்கத்திலேயே ஒரு "தீபாவலி" நடந்திருப்பது தான் அதற்குக் காரணம். தீபாவலிக் கதையில் திராவிட வீரனாகிய நரகாசூரனை அழிக்க எத்தனையோ பேர் முயன்றும் முடியாமல் கடைசியில் பாமா என்ற பெண்ணால் கொல்லப்பட்டான் என்று தான் சொல்லப்படுகிறது. அதே போலத்தான் நமக்குத் தலைவராக இருந்த பெரியார் செல்வாக்கை ஒழிக்க பிற கட்சி எதிரிகள் எவராலும் முடியாமல் கடைசியில் ஒரு பெண்ணால் அவர் செல்வாக்கு ஒழிந்தது. ஆகையால்தான் மற்ற தீபாவலிகளைவிட இந்த "தீபாவலி" அதிகமான துன்பத்தையுந் தொல்லையையும் நமக்களித்திருக்கிறது என்று சொன்னேன்.

சிவப்பு பெரிதாகியிருக்கிறது

திராவிடர்கழகக் கொடியை இதே குடந்தையில் பல தடவைகளில் ஏற்றிவைத்திருக்கிறேன். அப்போதெல்லாம் காலப்போக்கில் சுற்றியிருந்த கறுப்பு குறைந்து சிவப்பு வளரும் என்றே கூறினேன். இப்போது அதுதான் நடந்திருக்கிறது. இடைவிடாது செய்த பிரசாரத்தின் விளைவால் மக்கள் சற்று அதிகமாகத் தெளிவடைந்திருக்கிறார்கள். ஆகையால்தான் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியில் கறுப்பைக் குறைத்துச் சிவப்பைப் பெரிதாக்கியிருக்கிறோம்.

இன்று இரண்டு மூன்று மாதங்களாக உங்கள் முன்னிலையில் தோன்றாத தோழர்களை நீங்கள் பார்க்கிறீர்கள். நீண்ட நாள் ஓய்வுக்குப் பிறகு உங்களைச் சந்திக்கவந்திருக்கிறோம். ஓய்வு எல்லோருக்கும் உல்லாசத்தைக் கொடுக்கும். ஆனால் எங்களுக்குக் கிடைத்த ஓய்வு வேதனை, வெட்கம் இவற்றிடையே தான் கழிந்தது.

சதிக்குக் கேடயம் திருமணமா?

எங்களுக்கும் நாங்கள் விட்டுப் பிரிந்த தலைவருக்கும் இடையே ஏற்பட்ட பேதம் இன்று ஒரு தனிக் கட்சியை அமைத்துப் பணியாற்றும் நிலையில் கொண்டுவந்து விட்டது. பிணக்கு ஆச்சாரியார்-பெரியார் சந்திப்பிலேயே ஏற்பட்டுவிட்டது. இதுவரையில் நம் இயக்கத்தைப் பற்றிக் குறைத்துப் பேசாத ஆச்சாரியார், பல தடவைகளில் இந்த இயக்கத்தின் நிழலைக் கண்டாலே கலங்கும் ஆச்சாரியார் முதல் தடவை வந்தபோது இந்த இயக்கத்தால் விரட்டியடிக்கப்பட்ட ஆச்சாரியார், நம் தலைவரைக் கண்டு ஒன்றரை மணி நேரம் பேசிய பிறகு, இந்த இயக்கத்தால் வைதிகத்துக்கோ, பழமைக்கோ எந்த வித கேடும் விளையாது என்று உறுதி கூறினார். பேசத் தேவையில்லாத இடமான ரமணர் ஆசிரமத்தில், பேசப் பயந்துகொண்டிருந்த இந்த இயக்கத்தைப் பற்றி இழித்துக் கூறினாரே ஆச்சாரியார், அப்படியென்றால் நீங்கள் இருவரும் என்ன பேசினீர்கள் தலைவரே? என்று தான் கேட்டோம். உடனே எங்களை சதிகாரர், சூழ்ச்சிக்காரர் என்று சாடினார். எங்களை ஒழித்துக்கட்ட திருமணம் செய்துகொள்ளப் போவதாகக்கூறினார். 'சதிக்குக்' கேடயம் திருமணமா?

திருமணம் சொந்த விஷயமா?

பொருந்தா மணம் என்றோம். திருமணம் தனிப்பட்ட விஷயம். அதில் தலையிடுவது கண்ணியத்துக்குக் குறைவு என்றார். எத்தனையோ தடவைகள் பந்தலுக்குள்ளே புகுந்து அங்கிருந்த ஐயரை விரட்டியிருக்கிறோம், அம்மியை அகற்றியிருக்கிறோம், அக்கினியை அணைத்திருக்கிறோம். அப்போதெல்லாம் அது தனிப்பட்ட விஷயமாகத் தெரியவில்லை, சாரதா சட்டத்தை ஆதரித்த போது, இருதார மணத்தைத் தடுக்கும் மசோதாவைப் பாராட்டியபோது, ஒரே ஜாதியில் திருமணம் செய்துகொண்டால் ஆறுமாத கடுங்காவல் தர வேண்டும் என்று விடுதலையில் தலையங்கம் தீட்டியபோது, திருமணம் பொது விஷயமாக இருந்தது. ஆனால் தலைவர் தவறு செய்யும்போது மட்டும் அது தனிப்பட்ட விஷயமாக மாறுகிறது. இது நீதியா? அறிவியக்கத் தலைவா பேசும் வாதமா?

உழைத்தத் தலைவருக்கு உரிய மதிப்பு

நாங்கள் எங்கள் தலைவருக்குக் காட்டிய மரியாதையை வேறு எவருக்கும் காட்டியதில்லை. அவர் சொன்னதையெல்லாம் கேட்டோம். கேட்டதையெல்லாம் கொடுத்தோம். அதற்குப் பதிலாக அவர் கொடுத்த வசவுப் பழிகளை ஏற்றுக்கொண்டோம். இப்போதுதான் என்ன குறைந்துவிட்டது, எங்களால் ஜாதி ஒழியும் போது, திராவிட நாடு கிடைக்கும் போது, மடமை நீங்கி அறிவு பரவும் போது இதற்கெல்லாம் பாடுபட்டவர் பெரியார் என்ற பெயரை அழித்துவிடவாப் போகிறோம்? அழிக்க மனந்தான் வருமா? அவ்வளவுக் கயமைக் குணம் கொண்டவர்களல்லவே நாங்கள்! இப்போது நேரு விஜயம் செய்திருக்கும் அமெரிக்காவுக்கு இடப்பட்ட பெயர் வேறு ஒருவனுடைய பெயராயிருந்தாலும், அமெரிக்காவைப் பற்றி நினைக்கும்போது அதைக் கண்டுபிடித்த கொலம்பஸை மறந்தாவிடுகிறோம்? இன்னுஞ் சொல்லப்போனால் பெரியார் பெயரைத் திராவிட நாட்டின் சரித்திரத்தில் இடம் பெறச் செய்யவேண்டுமானால் அது இன்றைக்கு விலகி நிற்பவர்களால்தான் முடியுமே தவிர ஆதரிப்பவர்களில் ஒருவரால்கூட முடியாது.

கழகம் கூட்டுப்பண்ணை

திராவிட முன்னேற்றக் கழகம் உண்மை உழைப்பாளிகளின் ஒரு கூட்டுப் பண்ணை. எல்லோருடைய ஒத்துழைப்பிலும் இயங்கவேண்டியது. இறந்த காலம் நமக்கு இன்னலையும் தொல்லையையுந் தந்தது. நிகழ்காலம் நம்மை அவமானப்படுத்தியது. எதிர் காலம் —அதோ! — அறிவுலகக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் இருந்து நம்மை புன்முறுவலுடன் வரவேற்கிறது வாரீர்! இன்பத் திராவிடத்தில் நல்ல வாழ்வு எல்லோருக்குங் கிடைக்க உழைப்போம்"

தோழர் டி. கே. சீனிவாசன் கொடியேற்றிய பிறகு தோழர் வி. எஸ். ஏ. அமுதம் அவர்கள் சிறிது நேரம் பேசக் கூட்டம் இனிது முடிந்தது.

பிறப்பு

தேனி, அக். 28—

இந்தி எதிர்ப்பில் இரு முறை சிறைசென்றவரான இவ்வூர் தோழர் அ. தேவராசன் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் வி. தங்கத்தாயம்மாளுக்கு 13—10—49-ல் பிறந்த பெண் மகவுக்கு, இவ்வூரில் 26—10—49 ல் நடந்த தி. மு. க. துவக்க விழாவில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களால் 'மாலை மணி' எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி! (ஆ—ர்)

* * *

திருத்தங்கல், அக். 26—

இவ்வூர் தோழர் வி. இரத்தின சபாபதி அவர்களின் துணைவியார் தோழியர் கண்ணம்மாளுக்கு 21—10—49-ல் பிறந்த ஆண்மகவுக்கு 'திராவிடமணி' எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம் நன்றி! (ஆ—ர்)

அறிக்கை

ஏஜெண்டு தோழர்கள் பட்டியல் தொகையை பாங்கிடிராபட் அல்லது மணியார்டர் மூலம் அனுப்பவேண்டுகிறோம்.

—மானேஜர்.

வாயளவில் நல்ல துணிவுதான்!

ஆனால் புள்ளிவிவரம்...

தோழர் காமராஜர் நடத்தும் தேர்தல் பிரசாரத்தில், திராவிடர்களைக் கண்டிக்கும் திருத்தொண்டைக் கும்பகோணத்தில் ஆற்றுகையில், தங்களுடைய துணிவை விளக்கும் சில சொற்கள் புகன்றார். திராவிடர்களைக் கண்டித்த முறை பழைய பாணிதான். அதைத் தவிர, குறை என்று எதனையும் கூற முடியாதல்லவா? எனவேதான், திராவிடர்கள் வெள்ளையனைச் சேர்ந்தவர்கள், வெள்ளையரால் கைவிடப்பட்டவர்கள் என்னும் பச்சைப் புளுகைக் கூறிக் கொண்டு நிற்கிறார் வெள்ளையனை குருவாசிரியர் என வழிப்பட்ட கூட்டத்தைச் சேர்ந்த இவர்.

இவருக்கேற்பட்ட பேச்சுத் துணிவுதான் இன்னும் வேடிக்கையானது. அதாவது, "அறிஞர் அண்ணாத்துரையாரும் மற்றும் சிலரும் நாட்டின் பொருளாதாரம் சீர்படக் குறுக்கு வழியைக் கண்டுபிடித்திருக்கின்றனர். கோவில்களிலுள்ள சொத்துக்களையும் மடாதிபதிகளிடம் இருக்கும் பொருள்களையும் அரசினர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதே அக்குறுக்கு வழி. இதுபோன்ற செயலில் ஈடுபட நமக்கொன்றும் பயமில்லை. அதனால் விளையும் பயனை எண்ணிப் பார்க்கும்போது இது வீண் வேலை என்பதே எங்கள் கருத்து. கேவலம் ஒரு நீர்த்தேக்கம் கட்டுவதற்குக்கூட இவர்கள் காட்டும் நிதி போதா"

என்று கூறியுள்ளார். இச்செயலில் ஈடுபடப் பயமில்லாத நிலையில் இவர்கள் இருக்கின்றார்கள் என்று சொல்லத் துணிந்ததே பாராட்டுக்குரியதுதானாகும். அது ஒரு நீர்த்தேக்கம் கட்டவாவது போதுமா போதாதா என்பது அறிஞர்கள் சூழலில் புள்ளிவிவரங்களுடன் செய்யவேண்டிய வேலையாகும். அந்தக் கவலை காமராஜருக்கு ஏன்? தோழர் அண்ணாத்துரையின் குறுக்குவழி பயன்படுமா என்பது பற்றித் தேர்தல் பிரசார மேடையிலன்றி, மற்ற சமயங்களில் சிந்தித்துமிராத காங்கிரஸ் தோழர்களுக்கு, மின்சார விளக்கால் உடல் வெளிச்சல் காணும் திருவாரூர் தியாகராஜருக்கு முதற்றர விளம்பரம் தந்து வரும் காங்கிரஸ்காரர்களுக்கு எப்படித் தெரியமுடியும். அறிஞர் சிலர் அமர்ந்து, புள்ளி விவரங்களைத் திரட்டிச் செய்யவேண்டிய முடிவல்லவா அது? அது பலன் தரத்தக்கது என்று அறியும் திறன் காமராஜருக்கு ஏற்படவில்லை, டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனுக்கு ஏற்பட்டது. அவர் கூறுகிறார் கோயில் மடங்களுக்குச் சொந்தமான வீடுகளை மட்டும் எடுத்தால் எவ்வளவு பொது நிலையங்கள் ஏற்படுத்தப் பயன்படுமென்பதை. காமராஜர் அறிவாரா தோழர் அண்ணாத்துரையின் குறுக்கு வழியை.

தோழர் 'அண்ணாத்துரையின் குறுக்கு' வழியை மேற்கொள்வதென்றால், பொதுமக்கள் தொண்டு வளரும்; வளர்ந்தால் பொது மக்கள் பலர் அறிவு பெறத் துவங்குவர் மக்கள் அறிவு பெறத் தொடங்கினால் தேர்தலில் ஒரே கட்சி வெற்றி பெற்றுக்கொண்டிருக்க முடியாது. இந்த நிலை ஏற்பட இடம் தருவாரா. தோழர் காமராஜர். ஆகையால்தான் மேடையளவில் தங்களுக்குள்ள பயமற்ற தன்மையை அழகுபட விளக்கி, குறுக்கு வழி கூறுபவர்கள் மீது திருப்பிடித்த குறைகளைக் கூறிக்கொண்டு, நாட்டு மக்களுக்குத் தாங்கள் செய்துள்ளவைகளை எடுத்துக்காட்டி, குறைபாடுகளுக்கு மன்னிப்புக் கோரி தங்கள் கட்சியைத் தேர்தலில் ஆதரிக்குமாறு வேண்டும் திருப்பணியில் தோழர் காமராஜர் துணிகரமாக இறங்கியுள்ளார்.

பதவி மோகமல்லாமல் பின் என்ன மோகமோ?

தஞ்சைநகர காங்கிரஸ் கமிட்டி ஆதரவில் நடந்த பொதுக்கூட்டத்தில் மராமத்து இலாக்கா அமைச்சர் பேசுகையில் "அமைச்சர் உண்மையில் பொதுமக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று இருக்கிறார்களே ஒழியப் பதவி மோகத்தினாலன்று" என்று கூறியுள்ளார்.

இது சரி என்றால், ஏழைமக்களுக்காக காங்கிரஸ்காரர்கள் செய்துள்ள நன்மைகளைவிட, தங்கள் கட்சி ஆக்கத்திற்கான வேலைகளில் கவனம் செலுத்தியிருப்பது அதிகமாயிருக்கக் காரணம் என்ன? குறுகிய காலத்திற்குள் மந்திரி சபைகள் மாறி மாறி வரக் காரணம் என்ன? பழைய மந்திரிகள் மக்கள் நலனுக்காக வேலை செய்யாமல் தங்கள் சொந்த நன்மைக்கு வேலை செய்து கொண்டார்களா? முன்னாள் மந்திரிகளாகிவிட்ட பிரகாசம், ஓமந்தூரார் ஆகியோர் மீதும் இத்தகைய குற்றச்சாட்டுகள் ஏதேனுமிருந்து பொதுமக்கள் மன்றத்தின் முன் அவர்கள் நிறுத்தப்பட்டனரா? இல்லையென்றால் பச்சைப் பதவி மோகந்தவிர, மந்திரி சபைமாறுதலுக்கு வேறு என்ன அவசியமும் அவசரமும் ஏற்பட்டன.

போகட்டும்! பதவியாசையில்லாத ஆட்சிப்பீடத்தார் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பணப் பஞ்சத்தை முன்னிட்டுச் சம்பளமே வாங்காமல் வேலை செய்ய முன்வந்தனரா? சட்டசபை உறுப்பினர்களாவது சம்பளத்தைத் துறக்க முன்வந்தனரா?

போகட்டும். பொது மக்கள் வாழ்விற்கு இன்றியமையாத உணவுப் பொருள்கள் பதுக்கப்படுவதைக் கண்டுபிடித்து, பதுக்கும் பெரிய பணக்காரர்கள் நீதிமன்றத்தின் முன் கொணரப்பட்டனரா? ஒரு படி அரிசி அதிகமாக வைத்திருந்தவன், செத்துப் போன நபரை உடனே தெரிவிக்காதிருந்தவன் போன்றவர்கள்தானே தண்டிக்கப்படுகின்றனர்! பணக்காரப் பதுக்கல்காரர்கள், கடிசிக்காரக் கள்ளமார்க்கெட்காரர்கள் விஷயங்களில் தலையிட வில்லையே ஆளவந்தார்கள். தலையிட்டால் அவர்களுடைய எதிர்ப்பு ஏற்படும் செல்வர்களின் எதிர்ப்பு தேர்தல் காலத்தில் கட்சிக்குக் கேடுவிளைக்கும். ஆதலால் தேர்தலில் தோல்வி கிடைத்தால் பதவி பெற முடியாது. எனவே, இந்த வகையான பொதுமக்கள் தொண்டு தானே நடக்கிறது இதற்குப் பெயர் பதவியில் ஆசையில்லாத பொதுமக்கள் தொண்டோ!

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.